AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை | எண்: 09 எழுத்து: 01 ஜனவரி 2015 | www.aharam.lk

## வாழ்க்கையில் உயர...



## முட்டி மோதி முன்னேறுங்கள்



மாதாந்த சிறுவர் சஞ்சிகை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2014

## மா/ ஆமினா மகளிர் தேசிய பாடசாலை - மாத்தளை



| | | | | |
|---|---|---|---|---|
| எம்.ஏ.எப். அக்னா | எம்.எச்.எப். ஹப்ஸா | எம்.ஐ.எப். நிஹ்லா | எம்.ஜே.எப். ஸாரா | இஸட்.எப். அஸ்ரா |
| 175 | 175 | 173 | 170 | 170 |



| | | | | |
|---|---|---|---|---|
| ஐ.எச். தன்யா | எம்.ஆர்.எப். ஸாஹ்றா | எம்.ஆர்.எப். நுஹா | என். இஸ்மா பானு | எம்.எஸ்.எப். ஷாபா |
| 169 | 167 | 165 | 163 | 163 |



| | | | | |
|---|---|---|---|---|
| எம்.எப். இல்மா | எம்.எச்.எல். அமானி | எம். ஹாஜரா | எம்.எச்.எப். அனிஸா | எம்.எச்.எப். சுரைய்யா |
| 161 | 161 | 159 | 159 | 159 |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| எம்.எஸ்.எப். அஸ்மா | எம்.ஏ.எப். கதிஜா | எம்.ஆர்.எப். ஸம்லா | எம்.என். ஆஜரா | எம். சமீறா | எம்.ஏ.எப். அப்றா |
| 158 | 156 | 155 | 154 | 152 | 152 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

எண்: 09, ஜனவரி: 2015, எழுத்து: 01




பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப்பிரதி | 50/- |
| 1 வருட சந்தா | 800/- |
| 6 மாத சந்தா | 400/- |

**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 076 670 4787
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk

## உள்ளே...


**முட்டிமோதி முன்னேறுங்கள்** 34



**தம்பிக்கு ஓர் மடல்** 19



**விஷேட வழிகாட்டல்**
தேவையுடையவர்களா நீங்கள்? 28




**வாழ்க்கையில் உயர...** 18





11



38



07

**பாடத்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| புலமைப்பரிசில் | 39 | வரலாறு | 16 |
| கணிதம் | 24 | விஞ்ஞானம் | 31 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இரிதல்

# உங்களை நீங்களே

## வளர்த்துக் கொள்ளுங்கள்

ஆளுமைகள் இரண்டு வகையில் உருவாகின்றன. ஒன்று, அத்தகையவர்கள் அவர்களது பெற்றோர், ஆசிரியர் அல்லது வேறு ஓர் ஆளுமையால் உருவாக்கப்படுகிறார்கள். மற்றையது, அவ்வாறு எத்தகைய சூழலும் அமையப் பெறாத போதும் சிலர் தம்மை சிறந்த ஆளுமைகளாக உருவாக்கிக் கொள்கிறார்கள். அதுதான் சுய முன்னேற்றம் என்பது. சுயமாகவே தன்னை அறிந்து முன்னேற்றிக் கொள்வது. எந்தளவு உயரம் உங்களால் பறக்க முடியும் என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும்.

இவ்விரண்டும் சிறந்த முன்னேற்றத்தைத் தரவல்லவைதான். என்றாலும் எல்லோருக்கும் அவர்களை வளர்த்து விடுபவர்கள் வாய்த்து விடுவதில்லை. அவ்வாறு வாய்க்காவிட்டால் வளர்ச்சி என்பது இல்லாமல் போய்விடக் கூடியதும் அல்ல. தமது சுயத்தை அறிந்து முன்னேறிய பல சாதனையாளர்களை வரலாறு பதிந்தே வைத்துள்ளது.

இன்று ஒருவரை வளர்த்து விடுவதற்கு மாத்திரமன்றி, சுய முன்னேற்றத்திற்குக் கூட ஏராளமான வாய்ப்புகள் நிறைந்துள்ளன. அவற்றை அறிந்து பயன்படுத்துவதுதான் உங்களது திறமை. உதாரணமாக, கற்றலும் வாசிப்பும் நூல்களுக்குள் சுருங்கியிருந்த காலம் மலையேறிவிட்டது. இன்று கற்பதற்கான வாய்ப்புகள் ஏராளம் ஏராளமாக நிறைந்துள்ளன. அந்த வாய்ப்புகளை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என சிந்திக்க வேண்டும். அதேநேரம், அன்று தகவல்களைத் தேடிக் கற்க வேண்டிய தேவை இருந்தது. அதனால் அனைவருக்கும் புதிய புதிய விடயங்கள் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை. ஆனால், இன்று தகவல்கள் உங்களைத் தேடியே வருகின்றன. மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறான புதிய புதிய விடயங்களைக் கற்று உங்கள் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான வழிவகைகளைத் தெரிந்திருக்க வேண்டும்.

புதிய தேடல், புத்தாக்கம் என்பன உங்களிடம் மிகைத்திருக்க வேண்டும். எந்நேரமும் கற்றுக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் உங்கள் முன்னேயே நிறைந்துவிட்டன. நவீன தொலைத்தொடர்பு சாதனங்களும் தொழிநுட்ப வளர்ச்சியும் இவற்றை உங்களுக்கு இலகுவாக்கிவிட்டன.

நீங்கள் எந்நேரமும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதுவும் உங்கள் பாடப் புத்தகங்களுக் கப்பால் கற்க வேண்டும். அதுவும் புதுப் புது விடயங்களைக் கற்க வேண்டும். எதையும் ஆராய்ந்து கற்க வேண்டும். கற்றலிலிருந்து உங்கள் ஆய்வு தொடங்க வேண்டும். அது உலகிற்கு பல புதுமைகளை வழங்க வேண்டும். உங்களை நீங்களே முன்னேற்றிக் கொள்ள வேண்டும். அதற்கான இன்றுள்ள வசதி வாய்ப்புகளை சாதகமாகப் பயன்படுத்த வேண்டும்.

உங்களிலிருந்து விஞ்ஞானிகள் உருவாக வேண்டும். கட்டிடக் கலை வல்லுனர்கள் உருவாக வேண்டும். அது மட்டுமல்ல, இன்று புதிய புதிய துறைகள் பல உருவாகிவிட்டன. அந்தப் புதிய துறைகளில் நீங்கள் வல்லுனர்களாக மிளிர வேண்டும். இவையெல்லாம் சாத்தியப்படாத காலத்திலிருந்து நாம் பேசவில்லை. நீங்கள் இலங்கையில் அல்ல, உலகின் எந்த மூலையிலிருந்தாலும் சாத்தியமாக்கக் கூடிய காலம்தான் இது.

உலகில் உள்ள பல்கலைக்கழகங்களின் கட்டடங்கள் போன்ற பௌதீக அமைப்புகளை மூட வேண்டுமோ என சிந்திக்குமளவு இணையவழிக் கலா நிலையங்களும் கற்கைகளும் மிகைத்துள்ளன. யாருக்கும் எங்கிருந்தும் எப்போதும் எதையும் கற்கலாம் என்ற உலகளாவிய நிலை பூகோள எல்லைகளைத் தாண்டி சாத்தியப்பட்டிருப்பது உங்கள் கனவுகள் நனவாக நல்லதொரு அறிகுறி ஆகும்.

புதிய மாற்றங்களை நீங்கள் உள்வாங்க வேண்டும். விஞ்ஞான தொழிநுட்பத்தின் அசுர வளர்ச்சியோடு இணைந்து நீங்களும் பயணிக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதுதான் அனுபவம். கடந்த கால அனுபவத்திலிருந்து புதிய திட்டமிடல்களைத் தொடங்க வேண்டும்.

புதிய கல்வியாண்டிலிருந்து புத்துணர்ச்சியோடு தீர்மானம் எடுங்கள். பூகோள எல்லை தாண்டி கனவு காணுங்கள். உங்கள் கனவுகள் நனவாகுவதற்கு ஏராளமாக சந்தர்ப்பங்கள் உள்ளன. உங்களை நீங்களே வளர்த்துக் கொள்வதற்கு உறுதிபூணுங்கள். வாழ்வு வளமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஸல்மானுல் பாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக அல்லாஹ் வெட்கமுடையவன்; தாராள தன்மை கொண்டவன். தனது அடியான் உயர்த்திய கரங்களை வெறும் கைகளாக திருப்பி அனுப்புவதற்கு அவன் மிகவும் வெட்கப்படுகின்றான்." (திர்மிதி)

ஓர் அடியான் தனது ரப்போடு தொடர்பினை ஏற்படுத்துகின்ற சாதனங்கள் பல காணப்படுகின்றன. அச்சாதனங்களுள் மிக முக்கிய ஒன்றாக பிரார்த்தனை காணப்படுகின்றது. நம்பிக்கையோடு அல்லாஹ்விடத்தில் பிரார்த்திப்பவனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையிலான உறவு பலப்படுகின்றது.

யார் இப்பிரார்த்தனை மூலம் தனது ரப்பான அல்லாஹ்வை நெருங்க முயற்சிக்கின்றானோ அதனைக் கண்டு அல்லாஹ் மகிழ்ச்சியடைவதோடு, அவன் தன்னிடம் கேட்கின்றவற்றை வழங்குவதற்கும் பின் வாங்குவதில்லை.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸும் இதனையே எமக்கு எடுத்துரைக்கின்றது. இத்தகைய பிரார்த்தனையை ஒவ்வோர் இறைவிசுவாசியும் செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும் முகமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்:

''பிரார்த்தனையே இபாதத்தாகும்.'' (அபுதாவுத்)

"பிரார்த்தனை முஃமினுடைய ஆயுதமாகும். மேலும் அது மார்க்கத்தின் தூணாகவும் வானங்களினதும் பூமியினதும் ஒளியாகவும் உள்ளது.'' (ஹாகிம்)

நபியவர்களும் ஒரு மனிதன் இஸ்லாத்தின் வட்டத்திற்குள் வந்துவிட்டால் அடுத்த கணமே அவன் பிரார்த்தனை மூலம் ரப்புடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்பதில் கருத்தாக இருந்துள்ளார்கள். இதனை முஸ்லிமில் வருகின்ற பின்வரும் ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது:

"ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், நபியவர்கள் முதலாவது தொழுகையைக் கற்றுக் கொடுப்பார்கள். பின்னர் பின்வருமாறு பிரார்த்திக்குமாறு ஏவுவார்கள்:

''இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு வழி காட்டுவாயாக! எனக்கு நற்சுகத்தை தந்தருள்வாயாக! எனக்கு உணவளிப்பாயாக!''

இந்த வகையில் அல்லாஹ்வின் தூதரும் அதிக மதிகம் அல்லாஹ்விடத்தில் அவ்வப்போது ஏற்படும் தேவைகளை முன்னிறுத்தி பிரார்த்திப்பவராக இருந்தார்கள்.

உலகில் மனிதனாகப் பிறந்தவன் எப்போதும் தனது ரப்பின்பால் தேவையுடையவனாகவே இருக்கின்றான். அவனுடைய அடிப்படைத் தேவைகளை அவனுடைய ரப்பைத் தவிர வேறு எவராலும் நிறைவேற்றிக் கொடுக்க முடியாது.

''(நபியே!) என் அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கின்றேன். பிரார்த்தனை செய்பவனின் பிரார்த்தனைக்கு விடையளிக்கின்றேன். அவர்கள் என்னிடமே பிரார்த்திக்கட்டும். என்னையே நம்பட்டும் அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள் என்று கூறுவீராக!'' (2:186)

எனவே, மாணவர்களாகிய நாம் எம் தேவைகளை முன்னிறுத்தி அல்லாஹ்விடத்தில் அதிகம் பிரார்த்திப்போம். நிச்சயமாக அல்லாஹ் தன்னை நோக்கி உயரும் கரங்களை வெறுமனே விட்டுவிடுவதில்லை என்பதை மேலுள்ள ஹதீஸில் உணர்ந்து கொண்டோம்.

அந்த வகையில் நாம் பிரார்த்திக்கும்போது பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது:

**அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களைக் கொண்டு அழைத்துப் பிரார்த்தித்தல்.**

- ❖ மன்றாடி உள்ளச்சத்துடன் பிரார்த்தித்தல்.
- ❖ வுழு செய்து கொண்டு பிரார்த்தித்தல்.
- ❖ கிப்லாவை முன்னோக்கியிருத்தல்.
- ❖ இரு கைகளையும் உயர்த்துதல்.
- ❖ குரலைத் தாழ்த்தி பிரார்த்தித்தல்.
- ❖ பிரார்த்தனைக்கு முன்னர் நற்செயல் ஒன்றை புரிதல்.

**37ஆம் பக்கம் பார்க்க...**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# சூழல் சுத்திகரிப்பான்

# பன்றி



## இதுவும் அல்லாஹ்வின் ஒரு படைப்பு

வல்லவன் அல்லாஹ் இப்பிரபஞ்சப் படைப்புகள் அனைத்தையும் ஏதோ ஒரு விதத்தில் மனிதனுக்குப் பயனளிக்கும் வகையிலேயே படைத்துள்ளான். அந்த வகையில் அல்லாஹ்வின் ஒரு படைப்புத்தான் பன்றி. இது அசுத்தமான, உண்ண ஹராமாக்கப்பட்ட, மலக்குகள் கூட இதன் வடிவில் தோன்றாத ஒரு விலங்காக இருந்தாலும் அதுவும் அல்லாஹ்வின் ஒரு படைப்பு; அதிலும் பல அத்தாட்சிகள், அதிசயங்கள் இருக்கின்றன என்பதை மறந்துவிடலாகாது. பல பேர் இஸ்லாம் பன்றியையும் நாயையும் தடுத்திருக்கின்றது என்பதற்காக அவை அல்லாஹ்வின் படைப்பு அல்ல என்ற கருத்தில் இருக்கின்றனர். இது தவறு.

## பன்றி இனத்தில் பல்வகைமை

இதுவரை பன்றிகளில் 12 இனங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் முள்ளம் பன்றி, காட்டுப் பன்றி, இறைச்சிப் பன்றி, பண்ணைப் பன்றி என்பன சிலவாகும். இன்று உலகம் பூராகவும் சுமார் இரண்டு பில்லியன் எண்ணிக்கையான பன்றிகள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. இவையே பன்றி இனங்களில் அதிக எண்ணிக்கை வாய்ந்தன. காட்டுப் பன்றிகள் மூர்க்கத்தனம் வாய்ந்தவை. காட்டுப் பகுதிகளில் புதர்களில் வாழக் கூடியன. பொதுவாகப் பன்றிகள் வெள்ளை, சாம்பல், கறுப்பு, இளஞ்சிவப்பு போன்ற பல நிறங்களில் காணப்படுகின்றன. சில பன்றிகள் இரண்டு, மூன்று நிறக் கலவையிலும் காணப்படுகின்றன. வெள்ளை நிறப் பன்றிகளே இறைச்சிக்காக அதிகம் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன.

## எதையும் உண்ணும் அமைப்பிலுள்ள மூக்கும் வாயும்

பன்றிகள் அனைத்துமுண்ணி வகை என்பதால் எதையும் உண்ணக் கூடிய வகையில் அவற்றின் மூக்கும், வாயும் அமைந்துள்ளன. கூர்மையான மோப்பசக்தி கொண்ட சப்பையான மூக்கு மற்றும் அதிலுள்ள இரண்டு துவாரங்களின் உதவியுடன் அழுக்குகள் எங்கிருந்தாலும் அவற்றின் துர்வாடையை வைத்துத் தேடிக் கண்டுபிடித்து விடுகின்றன. முகத்தை உணவில் திணித்து நீண்ட நாக்கால் நக்கியும், உறிஞ்சியும் வாயினுள் உணவை எடுத்து உறுதியான பற்களால் அரைத்து உணவை உண்டு விடுகின்றன. காட்டுப் பன்றிகளின் வாயின் இரு புறமும் நீண்ட பற்கள் வெளியே தெரியக் கூடிய வண்ணம் இருக்கும். இவற்றால் தமது எதிரியைத் தாக்குகின்றன.

## அதிகமாக சேற்றை விரும்பக் காரணம்

பன்றிகளின் உடல் நீர்யானையின் உடலமைப்பை ஒத்த தோற்றத்தைக் கொண்டுள்ளன. ஆனால், மென்மையான தசையாலானது. பன்றிகளுக்கு உடலில் வியர்வை சுரப்பிகள் இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாததால் அவை அதிகம் நீரில் இருப்பதன் மூலம் அல்லது உடம்பின் மீது சேற்றைப் பூசிக்கொள்வதன் மூலம் தமது உடம்பைக் குளிர்வித்துக் கொள்ள விரும்புகின்றன. எனவே தான் பன்றிகள் எப்போதும் சேற்றுக்குள் இருப்பதைக் காண் கின்றோம். மேலும், இந்த சேற்றுப் பூச்சானது சூரிய வெப் பம் மற்றும் இதர பூச்சிகளின் கடியிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் உதவுகிறது. பன்றிகளின் தோலில் இருந்து எடுக் கப்படும் மென்மையான முடிகள் பொதுவாக தூரிகை செய்யப் பயன்படுகின்றன.

### அழுக்குகளைக் கிளற உதவும் கால்கள்

இவற்றின் உடற் பருமனை விட கால்கள் குட்டையாக உள்ளன. அத்தோடு பின் கால்களை விட முன் கால்கள் இன் னும் குட்டையாக இருக்கும். இதனால் அவற்றினால் குனிந்து சிரமப்படாமல் உணவினருகே இலகுவாக வாயைக் கொண்டு சென்று உண்ண முடிகின்றது. மட்டுமன்றி, இத்தகைய கால மைப்பினால்தான் இவற்றால் வேகமாக ஓடவும் உந்திப் பாய வும் முடிகிறது. பாதங்களில் முன்னாலும் பின்னாலும் இரண்டு இரண்டு விரல்களும் அவற்றில் நக அமைப்பும் இருக்கும். இது அழுக்குகளைக் கிண்டிக் கிளறி உணவு தேட உதவும்.

### புத்திக் கூர்மையுள்ள விலங்கு

பன்றிகள் புத்திக் கூர்மையுள்ள சமூக விலங்குகளென அறி யப்படுகின்றன. நாய், பூனைகளை விட இவற்றை எளிதில் பழக்கப்படுத்திக் கொள்ள முடியும் என விலங்கியலாளர்கள் கூறுவர். அதனால்தான் முஸ்லிமல்லாத மேற்கத்தேய மக்களில் பலர் இவற்றை செல்லப் பிராணிகளாக வளர்க்கின்றனர்.

### பன்றி வளர்ப்பு

இன்று உலகெங்கும் இறைச்சிக்காகவும் கொழுப்புக்கா வும் தோலுக்காகவும் பன்றிகள் பண்ணை அமைப்பில் வளர்க் கப்படுகின்றன. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு பண்டங்களில் பன்றிக் கொழுப்புகள் கலக்கப்படுகின்றன. பன்றிகள் வேகமாக வளரும் தன்மையுடையன. அவை நல்ல பராமரிப்பில் ஒரே சமயத்தில் எட்டு முதல் பன்னிரெண்டு குட்டிகளை ஈனக் கூடியவை. பன்றிகள் சிறிய இடைவெளியி லேயே தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ளும். பிறந்து 8-9 மாதங்களிலேயே ஒரு பெண் பன்றி இனப்பெருக்கத்திற்குத் தயாராகிவிடும். ஒரு வருடத்திற்கு 2 முறை குட்டி ஈனும். எமது நாட்டிலும் பன்றி வளர்ப்பு மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் பிரதானமாக மேற் கொள்ளப்படுகின்றது.

### சூழல் சுத்திகரிப்பான்

மனித சூழலை சுத்திகரிப்பதற்கென்று அல்லாஹ் பல விலங் குளைப் படைத்துள்ளான். அவற்றில் பன்றியும் ஒன்று. அதன்

**பன்றி இறைச்சி உண்பதால் மனிதனுக்கு எழுபது விதமான நோய்கள் உண்டாவதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. பன்றி இறைச்சி உண்பதால் மனிதனின் வயிற்றில் வட்டப்புழு (Roundworm) ஊசிப்புழு (Pinworm), கொக்கிப்புழு (Hookworm) போன்ற குடற்புழுக்கள் உண்டாகின்றன.**

உணவே சூழலில் உள்ள அழுக்கு கள்தான். இவற்றை பன்றிகள் தேடித் தேடி உண்பதால் சூழல் ஓரளவு சுத்திகரிக்கப்படுகின்றது. உண்ணும் அழுக்குகள் சமிபா டையும் விதத்தில் அல்லாஹ் அவற்றின் சமிபாட்டுத் தொதியை யும் வடிவமைத்துள்ளான். பசுந்தீ வனம், தானியங்களின் உப பொருட் கள், இறைச்சிக் கழிவுகள், சமைய லறைக் கழிவுகள், பழைய உண வுகள், அசுத்தமான நீர், மலம், இறந்து அழுகிப்போன பிராணி களின் உடல்கள் என அனைத்தை யும் உண்டு தீர்த்துவிடுகின்றன. நவீன கழிப்பறை வசதி இல்லாத கிராமப்புறங்களில் மனிதர்கள் காடுகளிலும் வெட்டவெளிகளிலும் கழிக்கும் மலசலத்தைக் கூட சுத் தம் செய்வது பன்றிகள்தான். அத் தோடு பண்ணைகளில் பன்றி களை ஒன்றாக அடைத்து வளர்க் கும்போது அவை தன்னுடைய மலத்தையும் பிற பன்றிகளுடைய மலத்தையும் சேர்த்து உண்ணவும் செய்கின்றன. இவ்வாறு பல வகை யிலும் எமது சூழலை சுத்திகரிக் கின்றன. இதனால், பன்றிகளுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பாதிப்பு இல்லாவிடினும் அவற்றின் உடலில் அதிகமான நோய்க்கிருமிகள் காணப்படுகின் றன. எனவேதான் பன்றி இறைச் சியை இஸ்லாம் ஹராமாக்கியுள் ளது.

### பன்றி இறைச்சியை அல்குர்ஆன் உட்பட பைபிளும் தடை செய்கிறது

பன்றி இறைச்சியை அல்குர் ஆன் மட்டுமன்றி நபியவர்களுக்கு முன் வந்த ஈஸா நபியும் பன்றியின் மாமிசத்தைத் தடுத்துள்ளார்கள். இருந்தும் மேற்குலகிலும் எமது நாட்டிலும் பன்றிகளை வளர்ப்ப வர்களாகவும் பன்றி இறைச்சியை உண்பவர்களாகவும் அதிகம் இருப் பது கிறிஸ்தவர்கள்தான் என்பது கவலைக்குரிய செய்தி.

''பன்றியும் புசிக்கத்தகாது. அது விரிகுளம்புள்ளதாயிருந்தும், அசைபோடாதிருக்கும், அது உங் களுக்கு அசுத்தமாயிருப்பதாக, இவற்றின் மாமிசத்தைப் புசியாம லும் இவற்றின் உடலைத் தொடா மலும் இருப்பீர்களாக.''

(உபாகமம் 14:8)

(லெவிட்டிக்ஸ் 11:7-8)

(டியுட்டர்னோமி 14:8)

(புக் ஒப்ஃ எசாயா65:2-5)

என்ற அமைப்பில் பல அத்தியா யங்களில் பைபிள் பன்றி இறைச்சி உண்பதைத் தடுக்கின்றது.

அவ்வாறே அல்குர்ஆனும் தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்ட தும் ஆகியவற்றைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கிருக்கிறான். (2:173) (5:3) (6:145) (16:115) என்ற வசனங்களூடாக பன்றி இறைச் சியைத் தடை செய்கின்றது. இதற் கான பல்வேறு விஞ்ஞானபூர்வ மான ஆராய்ச்சி முடிவுகளை இங்கே அவதானிக்கலாம்.

பன்றி இறைச்சி கூடாது என்ப தற்கான தர்க்கரீதியான காரணிகள்

பன்றி இறைச்சி உண்பதால் மனிதனுக்கு எழுபது விதமான நோய்கள் உண்டாவதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. பன்றி இறைச்சி உண்பதால் மனிதனின் வயிற் றில் வட்டப்புழு (Roundworm) ஊசிப்புழு (Pinworm), கொக்கிப்புழு (Hookworm) போன்ற குடற்புழுக்கள் உண் டாகின்றன. அதிலும் முக்கியமாக வயிற்றில் நாடாப் புழுக் களும் உருவாகின்றன. இந்த நீளமான நாடாப்புழு மனித குடலின் அடிப்பகுதியில் சென்று தங்கிவிடுகிறது. அது இடும் முட்டை இரத்த நாளங்கள் வழியாக உடலின் எல்லாப் பாகங் களுக்கும் பரவுகிறது.

இந்த முட்டை மனித மூளையைச் சென்றடைந்தால் மனி தன் தன் நினைவாற்றலை இழப்பான். இதயத்தைச் சென் றடைந்தால் மாரடைப்பு உண்டாகிறது. கண்களைச் சென் றடைந்தால் கண்பார்வை அற்றுப்போகிறது. ஈரலைச் சென் றடைந்தால் ஈரல் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு பன்றி இறைச்சி உண்பதால் மனித வயிற்றில் உருவாகும் நாடாப் புழுவின் முட்டைகள் மனித உறுப்புகள் அனைத்தையும் செயலிழக்கச் செய்யும் வல்லமை உள்ளவை.

பன்றி இறைச்சியில் திரிச்சுரா திச்சுராஸிஸ் (Trichura Tichurasis) என்ற பெயரையுடைய மற்றோர் ஆபத்தான குடற்புழு உள்ளது. பன்றி இறைச்சியை நன்றாக வேக வைத்து எடுத்தாலும் இவ்வகை புழுக்கள் அழிவதில்லை. அந்த வெப் பத்தையும் தாக்குப் பிடித்து அவை மனித வயிற்றைச் சென் றடைந்து அங்கே தமது இனப்பெருக்கத்தை ஆரம்பிக்கின் றன.

அத்தோடு, பன்றி இறைச்சியில் மாமிச சத்தைவிட கொழுப்புச் சத்தே அதிகம். பன்றி இறைச்சி உண்பதால் ஏற்படும் கொழுப்புச் சத்து மனித இரத்த நாளங்களை அடைத்து விடுவதால் மனிதனுக்கு இரத்த அழுத்த நோயும் மாரடைப்பும் உண்டாகின்றது. எனவே அமெரிக்கர்களில் ஐம்பது சதவீதம் பேர் இரத்த அழுத்தம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதில் ஆச்சரியம் இல்லை.

அதுமட்டுமன்றி, பெருமளவில் பன்றிகளை பண்ணை களில் வளர்ப்பதால் நோய்கள் பரவுகின்றன. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு சுவைன்புளூ என்ற பெயரில் மெக்சி க்கோ பண்ணைகளிலிருந்து பரவத் துவங்கிய பன்றிக் காய்ச் சல் பல உயிர்களைக் காவு கொண்டதையும் நாம் அறிவோம்.

### ஈஸா நபியின் வருகை

இத்தகைய பல்வேறு பிரதிகூலங்கள் பன்றியால் விளை வதால்தான் இறுதியாக ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர் கள் வந்து பன்றிகளைக் கொல்வார் என நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருக் கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலக நாடுகளின் பண அலகுகள்

- கனடா - டொலர்
- கட்டார் - ரியால்
- இத்தாலி - லீரா
- ஈராக் - டினார்
- லிபியா - ரியால்
- ஓமான் - திர்ஹம்
- ஜப்பான் - யென்
- பிரேசில் - குருசிய்ரோ
- துருக்கி - லீரா
- மலேசியா - றின்கிட்



ஏ.எல். பாத்திமா அகீலா
தரம் - 9
மஹ்மூத் மகளிர் கல்லூரி
கல்முனை

# சிந்தனை எவ்வாறு பிறக்கின்றது?



சிந்தனைகள் ஒவ்வொரு விதமாக அமையும்.
சிந்தனைகள் தோன்றியவுடன் எழுதி வைக்க வேண்டும்.
இடங்களை மாற்றி யோசிக்க வேண்டும்.
தகவல்கள் அனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டும்.

**"பிற்போடல் நேரக் கள்வன்" இது முன்னோர் கருத்து**

- கனவுகளை பயன்படுத்த வேண்டும்.
- தூரநோக்குமிக்க பார்வை வேண்டும்.
- வித்தியாசமாக சிந்தித்தல் வேண்டும்.
- தன்னம்பிக்கை கொள்ள வேண்டும்.


**ஆரோக்கியமான உடலில்தான் ஆரோக்கியமான அறிவிருக்கும்**

- முரணாக சிலவற்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
- ஓர் உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.
- நிதானமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.
- அல்லாஹ்வை என்றும் மறக்கக் கூடாது.

சபீஹா சிஹாப்தீன்
பத்ரியா ம.க.
மாவனெல்லை

# அச்சுக் கலையை
## கண்டுபிடித்தது யார்


- சீனர்கள் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சுக் கலையைக் கண்டு பிடித்தனர். மட்பாண்டப் பொருட்களிலேயே இந்த அச்சுக் கலை முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. ஐரோப்பாவில் அச்சுக் கலையுடன் தொடர்புடைய இரண்டு பிரதான பெயர்கள் பிரசித்த மடைந்துள்ளன. லோரன்ஸ் ஜன்சூன் கொஸ்ரர் ஒப் ஹார்லெம் மற்றும் ஜேகன்னல் குட்டன்போந் ஒப் பெயின்ஸ் என்பவையே அவை.
- அச்சுக் கலை ஆரம்பத்தில் மரத்தில் சொற்களை அல்லது சொற்றொடர்களை வெட்டி அதனை ஒழுங்குபடுத்தி அச்சடிக்கப்பட்டது. இதற்கு மை அல்லது திந்தையைப் பயன்படுத்தினர்.
- பின்னர் காலப்போக்கில் இந்த அச்சுக் கலை வளர்ச்சியடைந்து பல்வேறு வடிவங்களில் பரிணாமம் பெற்றுள்ளது.



எம்.எல்.எம். வசீம்
தரம் - 10
க/தனூ/ அரபா முஸ்லிம் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# யானைக்கு

## இத்தனை பெயர்களா?

1. தும்பி
2. நடிகை
3. புகர்முகம்
4. தோல்
5. கரி
6. உம்பல்
7. கயமா
8. பகடு
9. நால்வாய்
10. கரிணி
11. குஞ்சரம்
12. களபம்
13. கயமே
14. மருண்மா
15. தந்தி
16. மாதங்கம்
17. ஒருத்தல்
18. களிறு
19. சிந்துரம்
20. கறையடி
21. அறும்பி
22. கும்பி
23. நாகம்
24. வழுவை
25. வல்விலங்கு
26. வேழம்
27. வாரணம்
28. அத்தி
29. இபம்
30. ஆம்பல்

எம்.எப். பஸீறா
அல் ஜலால் மு.க.வி.
கெடபோரிய
அரணாயக

# பொது அறிவுத் தகவல்கள்



❖ முதலில் வீதி சமிக்ஞை விளக்கு உருவாக்கப்பட்ட இடம்
- லண்டன் *(1868)*

❖ முதியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடு
- நியூசிலாந்து *(1898)*

❖ எடோ (Edo) என்ற நகரத்தின் இன்றைய பெயர்
- டோக்கியோ

❖ 16 நாடுகளை எல்லைகளாகக் கொண்ட நாடு
- சீனா

❖ உலகிலே மிகப் பெரிய வானிலை அவதான நிலையம்
- ஏசோ (Aso) வானிலை நிலையம்

❖ நூறு கதவுகளின் நகரம் என வர்ணிக்கப்படும் நாடு
- எகிப்து

❖ கடல்களில் மிகவும் பரந்த கடலான மத்திய தரைக் கடலின் பரப்பளவு
- 2,965,800 சதுர கிலோ மீற்றர்

❖ காப்பு, ஊசியை (Safety pin) கண்டுபிடித்தவர்
- வில்லியம் கூற்ஸ்

❖ உலகில் மிகவும் வெப்பமான இடம்
- எதியோப்பியாவில் உள்ள டால்லொல் ($49^{0}C$)

❖ மரகதத்தீவு என்று அழைக்கப்படும் நாடு
- அயர்லாந்து

❖ நைலோனைக் கண்டுபிடித்தவர்
- டபிளியூ.எச். காரோதேஸ்

❖ உயர்த்தி (Lift) கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு
- *1852*

❖ குளோரோபோம் (Chloroform) கண்டுபிடிக்கப் பட்ட ஆண்டு
- *1831*

❖ அண்டவெளிக் கதிர்களைக் கண்டுபிடித்தவர்
- மிலிகன்

❖ உருக்கை (Steal) கண்டுபிடித்தவர்
- ஹென்ரி பெசேமர் *(1855)*

எம்.எஸ். ஸம்லிநுஹ்லா
தரம் - 8
கமு/ அல் ஹம்றா வித்தியாலயம்
மருதமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்திக்க சில துளிகள்

- உலகில் கால்நடை அதிகம் கொண்ட நாடு
  - இந்தியா
- உலகில் பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடு
  - ரஷ்யா
- உலகின் மிக நீளமான நதி
  - நைல்
- உலகின் முதல் பெண் பிரதமர்
  - சிறிமாவோ பண்டாரநாயக்க
- உலகின் மிக நீளமான ரயில் குகை
  - சிகான் குகை ஜப்பான்
- உலகில் வேகமாக செல்லும் ரயில்
  - புல்லட்
- உலகில் மிகப் பெரிய பாம்பு இனம்
  - அனகொண்டா
- உலகில் தீவுகள் அதிகம் கொண்ட நாடு
  - இந்தோனேஷியா
- உலகில் தொழில் முன்னேற்றத்தில் முன்னணியில் உள்ள நாடு
  - அமெரிக்கா



ஆமினா முபாரக்
தரம் 11
சென் அன்ருஸ் பாலிகா ம.வி.
நாவலப்பிட்டி

# சிந்தித்துப் பாருங்கள்; சிறப்பாய் வாழுங்கள்

- எப்பொழுதும் நிதானமாக செயற்படுங்கள். அது உங்களை முன்னேற்றும்.
- விளங்காதவர்களுடன் விவாதம் செய்வதை விட விலகி நிற்பது சிறந்தது.
- நாவுக்கு சுதந்திரம் கொடுத்துவிடாதீர்கள். அது உங்களையே கொன்று விடும்.
- எல்லோருடனும் அன்பாகப் பழகுங்கள். ஆனால் அன்பிற்கு அடிமையாகி விடாதீர்கள்.
- உறவுகளைப் பேணுங்கள். அது உங்கள் பலத்தை பன்மடங்காக்கும்.
- அவசர முடிவுகளை எடுத்துவிடாதீர்கள். அது ஆபத்தான விடயங்களை தொடக்கி வைக்கும்.
- பிறர் நம்ப நடந்து கொள்ளுங்கள். பிறரை நம்பி விழுந்து விடாதீர்கள்.
- குறைவாக சிந்திப்பவர்கள் அதிகம் பேசுவார்கள். குறைவாகப் பேசுபவர்கள் அதிகம் சிந்திப்பார்கள்.
- இன்று சிரித்தால் நாளை நீ அழுவாய் என்பதை நம்பிவிடாதீர்கள். நாயன் செயல்.
- அதிகம் பேசுபவர்களுடன் குறைவாக நட்பு வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், அவர்களின் பேச்சில் அதிகமாக பொய்தான் கலந்திருக்கும்.

ஆயிஷா சித்தீக்கா ஜவ்பர்
தல்கஸ்பிடிய
அரனாயக்க

# சிந்தனைக்கு சில



- குறைவாக பேசு அதிகமாக சிந்தி.
- நீ நீயாக இரு.
- உன்னால் முடியும்.
- உனக்குள் ஒருவனாய் இரு.
- பசித்திரு, தனித்திரு, விழித்திரு! அப்போது இலட்சியத்தை அடையலாம்.
- மாற்றம் மட்டுமே உலகில் மாற்றமில்லாதது.
- சிக்கனமாக வாழ்.
- காலமும், கடலலையும் யாருக்காகவும் காத்திருக்காது.
- நீ எந்தப் பதவியில் இருக்கிறாய் என்பது முக்கியமல்ல, அந்தப் பதவியில் இருக்கிறாய் என்பதுதான் முக்கியம்.

லரீபா லாபீர்
தரம் 11
க/ தனு/ அரபா மு.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆடைகளைக் களையும் சமயம்

- இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எனது ஆடைகளை மெது வாக களையுங்கள். இப்போதுதான் நான் இஸ்ராயீல் அவர்களின் வேத னைப் பிடியிலிருந்து மீண்டு அமைதியடைந்துள்ளேன்.

குளிப்பாட்டும் சமயம்

- என் உடலின் மீது சூடான அல்லது குளிரான தண்ணீரை ஊற்றாதீர்கள். இஸ்ராயீல் (அலைஹிஸ்ஸலாம்) உயிரை வாங்கியதால் உடல் நொந்து போயிருக்கிறேன்.

சுத்தம் செய்யும்போது

- என் உடலை அழுத்தித் தேய்க்காதீர்கள். எனது உயிர் பிடிக்கப்பட்டதால் புண்ணாக இருக்கிறேன்.


ஜனாஸாவை தூக்கிச் செல்லும்போது

- என் உடன் பிறவிகளே! என் அன்புக்குரியவர்களே! என் உலக வாழ்க்கை என்னை நாசப்படுத்தியது போல் உங்களையும் நாசப்படுத்த வேண்டாம். விழித்துக் கொள்ளுங்கள். நான் என் மனைவி மக்களுக்காக சொத்துக்களை விட்டுச் செல்கிறேன். நீங்கள் நலமாக வாழும்போது என் மீது பாவங்களையும், கடன் பாரத்தையும் சுமத்தி விடாதீர்கள்.

தொழுகை நடத்தும்போது

- மரணித்தவர்களை மறந்து விடுவார்கள் என்றுதான் இவ்வளவு காலமும் தெரிந்திருந்ததேன். நீங்கள் என்னை மறந்து விடாதீர்கள்.

# ஜனாஸாவின் குரல்



பாத்திமா சரீஹா
மடிகே மிதியால

# உயிரினமும் அறிவும்

**உலகிலுள்ள உயிரினங்கள் ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ளன. அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுள்ளன.**

1. ஓரறிவு - தொடுவுணர்வு
   புல், மரங்கள் போன்றவை ஓரறிவு உயிரினங்களாகும்.
2. ஈரறிவு - தொடுவுணர்வு, சுவையுணர்வு
   நத்தை, சிப்பி, சங்கு போன்றவை ஈரறிவுள்ள உயிரினங்கள்.
3. மூவறிவு - தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு
   எறும்பு, கரையான் போன்றவை மூவறிவுள்ள உயிரினங்களாகும்.
4. நாலறிவு - தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு
   தும்பி, வண்டு போன்றவை நாலறிவுள்ள உயிரினங்களுக்கு உதாரணங்களாகும்.
5. ஐந்தறிவு - தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு, செவியுணர்வு
   பறவைகளும், விலங்குகளும் ஐந்தறிவுள்ள உயிரினங்களாகும்.
6. ஆறறிவு - தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு, செவியுணர்வு, பகுத்தறியும் உணர்வு
   மனிதன்



எம்.எல்.எம். அஜ்மல்
தரம் 11
க/ சென். மேரிஸ் கல்லூரி
நாவலப்பிட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# English with


Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

Happy to meet all of you after a long, long vacation… I hope all of you would have enjoyed the vacation in various ways. Now, time to be serious. You all have stepped into a new academic year; you, all have been promoted to a higher grade. This means you have grown up and have to be more serious in studies. I think all of you would have made certain plans as to how to make the new academic year fruitful.

***Here are some of my tips for you to add into your list***

- ✓ I will study hard this year and make my parents feel proud about me
- ✓ I will not engage in useless talks and backbiting
- ✓ I will save some money from my pocket money
- ✓ I will spend more time with my parents and grandparents
- ✓ I will pray Sunna prayers as well, along with the Farl prayers
- ✓ I will improve my English
- ✓ I will keep my room and home clean
- ✓ I will never hurt anyone
- ✓ I will try to learn something new every day
- ✓ I will make new friends only for Allah's sake



So friends, try to follow at least some, from my tips above. I am sure that you will strictly follow what you have planned.

And remember friends, we celebrate the new-year on the first of Muharram. January first is only a beginning of a new academic year for all of us.

No matter how much marks you have scored in the previous year, no matter how much naughty you were in the previous year, be firm that this year 'I will prove others wrong regarding me'. Seal the dead past and step forward, you have a very long journey to go to achieve success in both the lives



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**To start this new academic year afresh, shall we do some warm up exercise that will boost our brain?**

1. When does an Indian potato changes its nationality?
2. If it took twelve men eighteen hours to build a wall, how long would it take nine men to build it?
3. I have four wheels and flies. What am I?
4. What two things you can never have for dinner?
5. How do you make the number one disappear by adding to it?

### *Answers*

(When it becomes French fries, no men, b'cos the wall is already built, a garbage truck, lunch and breakfast, add G for one and it will be GONE)

## Hadith of the month

"THERE ARE THREE SIGNS OF A HYPOCRITE: WHEN HE SPEAKS HE SPEAKS LIES, WHEN HE MAKES A PROMISE HE BREAKS IT, AND WHEN HE IS TRUSTED HE BETRAYS HIS TRUST." (BUKHARI)

## Laugh a while



Student : can I go to the toilet?

Teacher : May I go to the toilet?

Student : But I asked first!!!

## Your Corner

## My Father



My Father is Buhari. He is a business man. He knows Tamil and Sinhala languages. He has three lovely kids. His hobbies are gardening and helping the poor. He is a good business man in the society. He helps me too, in my studies. He is very keen in my education. Sometimes he helps me in cooking too. He wears Sarong and shirt or t-shirt. He never misses reciting the Quran and praying. He loves me and my mother very much. I too, love my father very much. I wish him success in all his life.

**Buhari Firdhausiya**
**Valaichenai**

# Hospitality

Muhammad (Sal) is the guide for the entire humankind. Hospitality is one of the important aspects our prophet (Sal) practised and preached. The following incident proves the extent of prophet (Sal)'s hospitality.

A man, once related to the prophet his state of poverty. Then the prophet (Sal) questioned each of his wives whether they had any food remaining with them. All of them unanimously answered that no food was available but water. Then the prophet (Sal) inquired the Sahabaas around him whether they could afford to provide food for the poor man. A Sahabaa of Madeena volunteered and took the visitor to his house. On reaching home, he realized that the food at his home was sufficient for his children only. Then according to his advice, his wife put the children to sleep. The visitor was made to sit to have the food. According to the plan of the Sahabaa, the lamp was put off. The visitor




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had the food in darkness. The husband and wife spent that night in hunger. The next morning prophet Muhammad (Sal) greeted the Sahabaa with the words

Allah is pleased with your conduct. This shows that we should also be hospitable as much as we can with our visitors.

**Muhammad Salman Nazeer**
**Werawatta Wisdom International School**
**Panadura**



## The Mahaweli River

MahaweliRiver is the longest river in Srilanka. It originates from Adam's peak and reaches the ocean somewhere near Trincomalee. Mahaweli River is very useful to our country. It covers a large area of arable land where agriculture is done.

Irrigation to these lands is done using the water from the Mahaweli River. In the past our country produces sufficient rice to feed all the people in our country and our country was called "the granary of the East". This river helps people in many ways. It helps to generate hydro power. It can be said that this river helps to build the economy of the country. Under the accelerated Mahaweli Development Project, a large number of unemployed people got jobs

This river does not dry up. Mahaweli River is a great natural gift to our country. Masha Allah!!!

**A.L Fathima Akeela**
**Grade 8**
**Muhammad Ladies College**
**Kalmunai**

## Some Golden Words



- Talk slowly, but think quickly
- Give people more than they expect and do it cheerfully
- If you win; you need not explain. But if you lose you should not be there to explain
- One best book is equal to a hundred good friends. But one good friend is equal to a library
- Nothing is impossible to a willing heart
- Write your sad time in sand, write your good time in stone

**M.I Fathima Amrin**
**Grade 10**
**Km/Shams Central College, Maruthamunai**

I'm eagerly waiting for your contributions with comments, stories,- poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

# فِي المَكْتَبَةِ

دَخَلَ إبراهِيمُ المَكْتَبَةَ

இப்றாஹீம் வாசிகசாலையினுள் நுழைந்தான்.

قَرَأَ قَلِيلاً ثُمَّ خَرَجَ

அவன் சிறிது நேரம் வாசித்து விட்டுப் பின்னர் வெளியேறினான்.

بَحَثَ إبْرَاهِيمُ عَنْ حَقِيبَتِهِ الخَضْرَاءِ خَارِجَ المَكْتَبَةِ. مَا وَجَدَ إبْرَاهِيمُ الحَقِيبَةَ.

வாசிகசாலைக்கு வெளிப்புறமாக தனது பச்சை நிறப் பையைத் தேடினான்.
அந்தப் பையை அவன் காணவில்லை.

شَاهَدَ إبْرَاهِيمُ صَدِيقَهُ أَحْمَدَ. هُوَ يَحْمِلُ حَقِيبَةً خَضْرَاءَ

அவனது நண்பன் அஹ்மத் ஒரு பச்சை நிறப் பையைச் சுமந்திருப்பதை இப்றாஹீம் கண்டான்.

سَأَلَ إبْرَاهِيمُ أَحْمَدَ لِمَاذَا أَخَذْتَ حَقِيبَتِي؟

அஹ்மதிடத்தில் இப்றாஹீம் ''ஏன் எனது பையை நீ எடுத்தாய்?'' என்று வினவினான்.

أَجَابَ أَحْمَدُ هَذِهِ حَقِيبَتِي، ثُمَّ فَتَحَ الحَقِيبَةَ.

''இது என்னுடைய பை'' என்று அஹ்மத் கூறிப் பையைத் திறந்தான்.

وَقَالَ لِأَحْمَدَ : أُنْظُرْ دَاخِلَ الحَقِيبَةِ، هَذِهِ مَلَابِسِي، ثُمَّ أَغْلَقَ الحَقِيبَةَ.

இந்தப் பையின் உட்புறத்தைப் பார்! இது எனது உடைகள் என்று இப்றாஹீமிடம் கூறிப்
பின்னர் பையை மூடினான்.

تَعَجَّبَ إبْرَاهِيمُ، هَذِهِ الحَقِيبَةُ تُشْبِهُ حَقِيبَتَهُ.

இந்தப் பை அவனுடைய பையைப் போன்றது என்பதால் இப்றாஹீம் ஆச்சரியமடைந்தான்.

ثُمَّ اعْتَذَرَ وَقَالَ لِأَحْمَدَ: عَفْوًا هَذِهِ لَيْسَتْ حَقِيبَتِي، فِيْ حَقِيبَتِي كُتُبٌ وَدَفَاتِرُ وَأَقْلَامٌ

பின்னர், அவன் கவலைப்பட்டு ''மன்னிக்கவும்! இது எனது பை அல்ல. எனது பையில் புத்தகங்களும்
அப்பியாசப் புத்தகங்களும் பேனாக்களும்தான் உள்ளன'' என்று அஹ்மதுக்குக்கு கூறினான்.

قَالَ لَهُ أَحْمَدُ رُبَّمَا تَجِدُ حَقِيبَتَكَ فِيْ المَكْتَبَةِ.

''சிலவேளை உன்னுடைய பை வாசிகசாலையில் இருக்கக் கூடும்'' என அஹ்மத் அவனிடம் கூறினான்.

نَسِيَ إبْرَاهِيمُ مَكَانَ حَقِيبَتِهِ. هَلْ هِيَ فِي الصَّفِّ؟ هَلْ هِيَ فِي المَلْعَبِ؟

தனது பையை வைத்த இடம், அது வகுப்பறையிலா? அல்லது விளையாட்டு மைதானத்திலா?
என்பதை இப்றாஹீம் மறந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**تَذَكَّرَ إِبْرَاهِيمُ أَخِيْرًا مَكَانَ الحَقِيْبَةِ. نَعَمْ، هِيَ فِي البَيْتِ.**

இறுதியாக இப்றாஹீம் ''ஆமாம், அது வீட்டில் உள்ளது'' என்று பையை வைத்த இடத்தை நினைவுபடுத்தினான்.

**بَحَثَ إِبْرَاهِيمُ عَنْ حَقِيْبَتِهِ خَارِجَ المَكْتَبَةِ**

இப்றாஹீம் தனது பச்சை நிற பையை வாசிகசாலைக்கு வெளியே தேடினான்.

**بَحَثَ مُحَمَّدٌ فِي التَّارِيْخِ الإِسْلَامِيِّ**

முஹம்மத் இஸ்லாமிய வரலாறு பற்றி ஆய்வு செய்தான்.

**حَقِيْبَتِي حَمْرَاءُ**

எனது பை சிவப்பு நிறமானது.

**حَقِيْبَةُ مُحَمَّدٍ سَوْدَاءُ**

முஹம்மதின் பை கறுப்பு நிறமானது.

**مَاذَا فِي حَقِيْبَةِ مُحَمَّدٍ؟**

*1. முஹம்மதுடைய பையில் என்ன இருக்கின்றது?*

**هَلْ حَقِيْبَةُ عُمَرَ سَوْدَاءُ؟**

*2. உமருடைய பை கறுப்பு நிறமா?*

**هَلْ حَقِيْبَةُ مُحَمَّدٍ حَمْرَاءُ؟**

*3. முஹம்மதுடைய பை சிவப்பு நிறமா?*

**لِمَنْ الحَقِيْبَةُ؟**

*4. பை யாருடையது?*

**لِمَنْ هَذَا القَلَمُ؟**

*5. இந்தப் பேனை யாருக்கு சொந்தமானது?*

**هَلْ هَذَا قَلَمُكَ؟**

*6. இது உன்னுடைய பேனையா?*

**هَلْ قَلَمُكَ أَزْرَقُ؟**

*7. உனது பேனை நீல நிறமுடையதா?*

| | பெண்பால் | ஆண்பால் | |
|---|---|---|---|
| வெள்ளை நிறமானது | ✗ بَيْضَاءُ | ✓ أَبْيَضُ | بَيْتِي |
| நீல நிறமானது | ✓ زَرْقَاءُ | ✗ أَزْرَقُ | دَرَّاجَتِي |
| கறுப்பு நிறமானது | ✓ سَوْدَاءُ | ✗ أَسْوَدُ | حَقِيْبَتِي |
| சிவப்பு நிறமானது | ✗ حَمْرَاءُ | ✓ أَحْمَرُ | قَلَمِي |
| பச்சை நிறமானது | ✓ خَضْرَاءُ | ✗ أَخْضَرُ | سَاعَتِي |
| மஞ்சள் நிறமானது | ✗ صَفْرَاءُ | ✓ أَصْفَرُ | هَاتِفِي |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## தரம் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### தரம் - 10

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. 'துலாபாரம்' என்னும் நன்கொடையை வழங்கிய மன்னன்.

i. துட்டகைமுனு ii. வசபன்
iii. மகாசேனன் iv. நிசங்கமல்லன்

2. நிரல் i இல் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் பெயர்களும், நிரல் ii இல் ஆக்கிரமிப்பு நிகழ்ந்த போது இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களும் உள்ளனர். நிரல் i க்கு ஏற்ப நிரல் ii ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| | நிரல் i | | நிரல் ii |
|---|---|---|---|
| 1. | சேனன், குத்திக்கன் | A | மித்தசேன்ன |
| 2. | எல்லாளன் | B | சூரதிஸ்ஸ |
| 3. | புலகத்தன் | C | வலகம்பா |
| 4. | பண்டு, பாரிந்த | D | அசேலன் |

i. BCAD ii. BDCA iii. BDAC iv. DBAC

3. 1ஆம் விஜயபாகு பொலன்னறுவையைக் கைப்பற்றிய ஆண்டு.

i. 1750 ii. 1700 iii. 1070 iv. 1463

4. அனுராதபுர இறுதிக் கட்டத்தில் கட்டப்பட்ட திருக்கேதீஸ்வரம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

i. மன்னார் ii. கொழும்பு
iii. முல்லைத்தீவு iv. திகாமடுல்ல

5. பொலன்னறுவையில் உள்ள ஏழடுக்கு மாளிகை எவ்வாறு அழைக்கப்படுகின்றது.?

i. ஜேதவனராமய ii. சத்மஹால் பிரசாதய
iii. மிரிசவட்டி iv. மகா விகாரை

6. இலங்கையின் தலைநகரத்தை குருணாகலுக்கு மாற்றிய மன்னன்.

i. இரண்டாம் புவனேகபாகு
ii. ஆறாம் புவனேகபாகு
iii. மகாசேனன்
iv. சுப தளபதி

7. தம்பதெனிய கதிகாவத்தையை எழுதுவித்தவன்.

i. 1 ஆம் பராக்கிரமபாகு
ii. 2 ஆம் பராக்கிரமபாகு
iii. 1 ஆம் விஜயபாகு
iv. 2 ஆம் விஜயபாகு

8. தலதாசிரித என்ற நூலை எழுதுவித்தவன்.

i. 2 ஆம் பராக்கிரமபாகு
ii. 3 ஆம் பராக்கிரமபாகு
iii. 4 ஆம் பராக்கிரமபாகு
iv. 1 ஆம் விஜயபாகு

9. அங்கோர்வட் என்னும் இந்துக்கோயில் அமைந்துள்ள நாடு.

i. கம்பூச்சியா ii. ஜாவா
iii. மியன்மார் iv. ஆப்கானிஸ்தான்

10. சிலுவை யுத்தம் எந்த நகரைக் கைபற்றுவதற்காக இடம்பெற்றது?

i. கொண்ஸ்தாந்து நோப்பில்
ii. அலெக்சாந்திரியா
iii. ரோம்
iv. ஜெருசலம்

11. மொகலாய மன்னர்களுள் ஒருவராக அமையாதவர்.

i. பாபர் ii. ஜஹாங்கீர்
iii. இல்துத்மிஷ் iv. சாஜஹான்

12. மன்சத்தார் முறையை அறிமுகப்படுத்திய மன்னன்.

i. அக்பர் ii. முஹம்மது பின்துக்கை
iii. ஹுமாயுள் iv. ஜஹாங்கீர்

13. பாமினி இராட்சியத்தை இறுதியாக ஆட்சி புரிந்தவன்.

i. முஹம்மது ஷா ii. அசுமது ஷா
iii. ஹுமாயுள் iv. பஹமன் ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானிகள் நிரல் i லும் அவர்களது கண்டுபிடிப்புகள் நிரல் ii லும் உள்ளன.

| | நிரல் i | | நிரல் ii |
|---|---|---|---|
| 1. | ஜோன் கே | A | புகையிரத என்ஜின் |
| 2. | ஹம்ரிடேவி | B | மோட்டார் வண்டி |
| 3. | ஜோர்ஜ் ஸ்டீவன்சன் | C | நூனாழி |
| 4. | டெம்ளர் | D | பாதுகாப்பு விளக்கு |

நிரல் i க்கு ஏற்ப நிரல் ii ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை.

i. CDAB ii. CDBA
iii. CBAD iv. DBAC

15. ஒல்லாந்து கிழக்கிந்திய வர்த்தக சங்கமும், பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தக சங்கமும் அமைந்த இடங்கள் முறையே.

i. கோவா, சென்னை
ii. சென்னை பற்றேவியா
iii. பற்றேவியா, பாண்டிச்சேரி
iv. பாண்டிச்சேரி, பற்றேவியா

16. ஐக்கிய அமெரிக்க சுதந்திரப் போர் நடைபெற்ற ஆண்டு.

i. 1775 ii. 1705
iii. 1776 iv. 1802

17. 16 ஆம் லூயி மன்னனின் மனைவியின் பெயர்?

i. மேரி அன்டோயினட்
ii. மேரி எலிசபத்
iii. மேரி கியூடினா
iv. 3 ஆம் மக்ஜிரட்

18. மறுபிறப்பு நூலை எழுதியவர்?

i. நெப்போலியன் ii. கவுன்கலூர்
iii. கரிபால்டி iv. லெனின்

19. ரஷ்யப் புரட்சிக்கு முதலில் அந்நாட்டை ஆட்சி செய்தவர்கள்.

i. லூயி மன்னர்கள்
ii. சார் மன்னர்கள்
iii. பொதுவுடமைவாதிகள்
iv. தொழிலாளர்கள்

20. கைத்தொழில் புரட்சி முதலில் ஏற்பட்ட நாடு.

i. பிரான்ஸ் ii. இத்தாலி
iii. இங்கிலாந்து iv. போர்த்துக்கல்

## விடைகள்

1. iv
2. ii
3. iii
4. i
5. ii
6. i
7. ii
8. iii
9. i
10. iv
11. iii
12. i
13. iii
14. i
15. iii
16. iii
17. i
18. i
19. ii
20. iii

## தரம் - 11

1. கடந்த கால வினாப் பத்திரங்களை அவதானித்து சில எதிர்கால வினாக்களைத் தயாரித்தல்.

(உ+ம்) பின்வரும் தலைப்புக்கள் இனி வரும் சாத்தியம் அதிகம் உண்டு.

அ. மானிய முறை
ஆ. ஐக்கிய நாட்டவையம்
இ. பிரான்சிய, ரஷ்ய புரட்சிகள்
ஈ. அமெரிக்க எழுச்சியும், ரஷ்யாவின் வீழ்ச்சியும்
உ. சோல்பரி, 72, 78 யாப்புகள்

2. வரலாறு பகுதி ii இல் சுமார் 25 பந்திகளை எழுத வேண்டி ஏற்படும். பந்தி எழுதும்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்:

அ. 10 வரிகளுக்கு குறையாதிருத்தல்.
ஆ. ஒரு பந்தியில் ஒரு விடயமே இடம்பெற்றிருத்தல்
இ. சிறிய, மயக்கமற்ற வசனங்களைக் கொண்டிருத்தல்.
ஈ. போதுமான தகவல்களை (ஆண்டுகளை) கொண்டிருத்தல்.

3. இறுதி நாட்களில் படித்த தலைப்புகளை நினைவுபடுத்துவதிலே நேரத்தை செலவழிக்க வேண்டும்.

37ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையில் உயர...

இறைவனை நம்பினால் அவன் மலையைச் சிறிதாக்கித் தந்துவிட மாட்டான். ஆனால், அந்த மலையை ஏறும் வழியை எளிதாக்கித் தருவான். முயன்றால் உங்களால் மலைகளை ஏறி வெல்ல முடியும். அதற்கு பருந்துகளின் சில கோட்பாடுகளைப் பின்பற்றுங்கள்.

**கோட்பாடு ஒன்று**

பருந்து உயரத்தில்தான் அதுவும் தனியாகத்தான் பறக்கும். கிளிகளுடனோ மற்ற பறவைகளுடனோ சேர்ந்து பறக்காது. கிளிகளிடமிருந்தும் காகங்களிடமிருந்தும் தள்ளியே இருங்கள்.

(பருந்துகள் பருந்துகளுடன் மட்டுமே பறக்கும்)

**கோட்பாடு இரண்டு**

பருந்துகளுக்கு வலுவான தூரநோக்கு இருக்கும். ஐந்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இரையைக் கூட அது பார்த்துவிடும். தனக்குரிய இரை தென்பட்டுவிட்டால் தன் பரந்த பார்வையை குறுக்கி கூர்மையாக்கி அதை அடைவதற்கான திட்டத்தில் இறங்கிவிடும். இடைப்படும் தடைகளைப் பற்றிக் கவலைப் படாது. அதைக் கைப்பற்றும் வரை அந்த இரை மீதிலான இலக்கை விட்டு வேறுபக்கம் திசையைத் திருப்பவே திருப்பாது.

(எந்தத் தடையும் இல்லாத ஒரே இலக்கு இருந்தால் வெற்றி நிச்சயம்.)

**கோட்பாடு மூன்று**

செத்த உணவை பருந்துகள் ஒருபோதும் சாப்பிடாது புத்தம் புதிய உணவுதான் அதற்கு வேண்டும். பிணம் தின்னிக் கழுகுகள்தான் செத்ததைத் தின்னும். பருந்துகள் அல்ல.

(உங்கள் கண்களுக்கும், காதுகளுக்கும் அது பொருந்தும். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்காமல் புதிய தகவல்களையே நாடுங்கள். துல்லியமாக ஆய்வு செய்யுங்கள்.)

**கோட்பாடு நான்கு**

புயல் என்றால் பருந்துக்கு மிகவும் விருப்பம். மேகங்கள் கூடும்போது பருந்து குதூகலிக்கும். புயலையே சாதகமாக்கிக் கொள்ளும். மேகங்களுக்கு அப்பால் பறக்க புயலின் வேகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். அந்தப் புயலின் பாதையையே கருவியாகக் கொண்டு தன் இறக்கைகளுக்கு ஓய்வு கொடுக்கிறது பருந்து. அந்த சமயத்தில் மற்ற பறவைகள் என்ன செய்கின்றன? மரக்கிளைகளுக்கு ஊடேயும், பொந்துகளிலும் புகுந்து கொள்கின்றன.

(வாழ்க்கைப் புயலை, உயர்வதற்குச் சாதகமாக்கிக் கொள்ளுங்கள். சவால்களை எதிர்த்தவர்கள்தான் இலாபகரமான சாதனையாளர்களாக உயர்ந்துள்ளனர்.)

**கோட்பாடு ஐந்து**

பருந்து முதுமை அடையும்போது அதன் இறக்கைகள் பலவீனமடைந்து விரைவாகவும் உயரமாகவும் பறக்கவியலாத நிலை உண்டாகும். முதுமை ஏற்பட்டு இயலாமையும், மரணமும் தெரியும்போது எங்கோ தொலைதூரத்துப் பாறையை நோக்கிச் செல்லும். அங்கே தன்னுடைய இறக்கைகளை சுயமாகவே ஒவ்வொன்றாகப் பிய்த்து எடுத்துத் தூக்கி எறியும். தன்னால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை ஏற்படும் வரை அப்படிச் செய்துவிட்டு அந்த மறைவிடத்திலேயே தனியாகத் தங்கியிருக்கும் பிறகு புதிய இறக்கைகள் முளைக்கும். மறுபடியும் புத்துணர்ச்சியோடு கிளம்பி பறக்கத் தொடங்கிவிடும்.

(சில சமயங்களில் நமது பழைய மூடப் பழக்க வழக்கங்களையும் அழுத்திக் கொண்டிருக்கும் சுமைகளையும் விட்டொழிக்க வேண்டியது அவசியமாகும். வாழ்க்கையை இலேசாக்கிட இது பேருதவியாக அமையும்.)

**'நம்பிக்கை' இலிருந்து...**

**ஏ.எம். மனாருல் ஹுதா**

**(ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தம்பிக்கு ஓர் மடல்

**அன்புள்ள தம்பிக்கு!**

**அஸ்ஸலாமு அலைக்கும்**

என் அன்புள்ள தம்பிக்கு! நான் நலம் அதுபோல் நீயும் உனது உள்ளமும் நலமாக இருக்க வல்ல இறைவனைப் பிரார்த்தித்தவளாக;

தம்பி! புதிய பாடசாலையும், புதிய பாடங்களும் உன்னைக் கலக்கத்தில் ஆழ்த்தியிருப்பதை நான் அறிகிறேன். உன் மனோநிலை சீராக இல்லை. பொறுப்புகளைச் சுமக்க நீ பயப்படுகிறாய். விழுந்தால் எழப் பயப்படுகிறாய் என்பதையும் நான் அறியாமலில்லை.

இளம் கன்று பயமறியாது என்பார்கள். ஆனால் உன் நிலையோ தலைகீழாக இருக்கிறது. தம்பி! உனக்கோர் இளம் கன்றின் கதை சொல்கிறேன் கேள். அதிகாலைக் கதிரவன் வானில் ஜொலி ஜொலிக்க, குயிலினம் பாடலிசைக்க, மலர்கள் மலர்ந்து வரவேற்க மக்கா நகரினிலே பனூ மக்ஸூம் கோத்திரம் பேருவகை கொள்ள, வலீத் இப்னு முகீராவின் மகனாக பிறந்தார் எம் கதாநாயகர். அவர்தான் ஹாலித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

அவர் இளமைக் காலத்திலே தூரநோக்கு, திட்டமிட்டு செயலாற்றுதல், எடுத்த காரியத்தைக் கன கச்சிதமாக நிறைவேற்றல் என்பவற்றின் காரணமாக அக்கோத்திர வாலிபர்களில் மிகச் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தார். உஹத் போர் முதல் ஹுதைபியா உடன்படிக்கை வரை துணைப் பிரிவுக்கும் அவர்களின் குதிரைப் படைக்கும் தலைவராகவும் பின் இஸ்லாமியப் போர்ப் படைத் தளபதியாகவும் எதிரிகளை நிலைகுலையச் செய்து இஸ்லாமிய சாம்ராஜ்யம் அரபுப் பிரதேசத்திலிருந்து விரிவாகப் பரவ துணை புரிந்தார்.

இவர் ஹிஜ்ரி 8 ஸபர் மாதம் 1 ஆம் திகதி நபிகளாரின் கரத்தைப் பற்றி திருக் கலிமாவை மொழிந்தார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹாலித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைப் பார்த்துக் கூறினார்கள். ''உங்களின் புத்திசாலித்தனம், கல்வி, ஞானம், தொலைநோக்கு ஆகிய நற்பண்புகளைக் கவனித்து என்றாவது ஒரு நாள் நீங்கள் இஸ்லாத்தில் நுழைவீர்கள் என்று நான் முன்பே நினைத்திருந்தேன்'' எனக் கூறினார்கள்.

இவர் எதனைச் சத்தியம் என ஏற்றுக் கொண்டாரோ அதனை வெளிப்படையாவும், துணிவுடனும் மக்களுக்கு அறிவிப்பவராக இருந்தார். இவரிடம் காணப்பட்ட வெளிப்படையான தன்மை மற்றும் துணிவு எனும் இவ்விரு பண்புகளுமே அவரை வரலாறு போற்றும் மாவீரராக உயர்த்திக் காட்டியவை.

அவர் என்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாரோ அன்றிலிருந்து சத்தியத்தை மேலோங்கச் செய்யவும், அசத்தியத்தை வேரோடு சாய்க்கவும் போரிட்டுக் கொண்டே இருந்தார்.

மிகவும் கடுமையான காலகட்டங்களில் கூட தன் மனதில் சிறு தடுமாற்றத்தையும் உலாவவிட்டதில்லை. தோல்வி என்பதே அவர் வரலாற்றில் இல்லை. இவரின் வீரத்தை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவம்தான் மூஃதா போர். இப்போரில் 3000 முஸ்லிம்களும் 2 இலட்சம் எதிரிகளும் கலந்து கொண்டனர். இதில் முஸ்லிம் தளபதிகள் மூவர் ஒருவர் பின் ஒருவராக உயிர் துறக்க நான்காம் தளபதியாக படையை வழிநடத்தி வெற்றியும் ஈட்டினார். இவரின் சாதனைக்கு முன்னால் ரோமும், பாரசீகமும் மண்டியிட்டு நின்றன என்பதில் ஐயமில்லை.

எம் முன்மாதிரிகள் இவ்வாறிக்க நம்மில் கொஞ்சமாவது அது வெளிப்பட வேண்டும். தம்பி! துணிந்து செல். நிச்சயம் வெற்றி உனக்கே, இன்ஷா அல்லாஹ்.


**இப்படிக்கு உன் அன்பு தாத்தா**

ஹப்ஸா பின்த் ரவுப்
இஸ்லாஹிய்யா வளாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலின் இரகசியம்



**வாழ்வின்** வெற்றிக்கு கல்வியறிவு அவசியமான ஒன்றாக உள்ளது. சிறந்த முறையில் பாடங்களை கற்கும்போது கல்வி வளர்ச்சி எங்களிடம் ஒரு அடைவை ஏற்படுத்துகிறது. அதற்கு தூணாக அமையும் சில காரணிகள்:

**ஆர்வம்**

எந்தவொரு விடயத்தை செய்வதாக இருந்தாலும் ஆர்வம் அடிப்படையானது. ஆர்வமின்றி எதனையும் திறம்பட செய்ய முடியாது. அந்த வகையில் பாடத்தை படிக்க வேண்டும், விளங்க வேண்டும் என ஆர்வம் கொள்வது எங்களது அடைவுக்கு உரமாக அமையும். இதன் விளைவுதான் நாங்கள் நூல்களை நேர்த்தியாக பேணுவது.

''செயல்கள் அனைத்தும் எண்ணத்தை பொறுத்தே'' (ஹதீஸ்)

**பாடத்தின் மீதான அவா**

நாம் எந்தப் பாடத்தை அதிகம் விரும்புகிறாமோ அதில் அதிக பெறுபேறுகளை பெறுவாம். அந்தப் பாடத்தை படிப்பதால் நான் என்ன பயனை பெறுகிறேன் என்பதை அறிந்து கொள்வதனால் ஆசைகளை உருவாக்கலாம். குறிப்பாக, அனைத்து பாடங்களிலும் எமக்கு பயன்கள் உள்ளன. எங்களுக்கு விரும்பாத பாடம் என நாம் மனதிற் கொண்டால் எங்களது வீழ்ச்சி ஆரம்பித்து விடும்.

**பாட ஆசிரியர் மீதான விருப்பம்**

ஒரு பாடத்தை கற்றுக் கொள்ள வழிகாட்டடல் அவசியமாகும். அவ்வாறு வழிகாட்டும் ஆசிரியர்களை நாம் விரும்பினால்தான் அவர்களது பாடத்தை விரும்புவதற்கு எங்களது உள்ளம் இடமளிக்கும். பாடத்தை விரும்பும் போதுதான் அதன் மீது கொண்ட ஆர்வத்தினால் அதில் சிறந்த அக்கறை செலுத்திப் படித்து நல்ல பெறுபேறுகளை பெற முடியும். ஆகவே, ''பிடிக்காத ஆசிரியர்'' என்று யாரையும் நினைத்து விடக் கூடாது.

**பாடம் சார்ந்த தேடல்**

ஒரு பாடத்தில் சிறந்த தேர்ச்சியை பெற பாடசாலை பாடம் மாத்திரமன்றி, நூலகங்களிலும் அந்தப் பாடம் சம்பந்தமான வேறு நூல்களை தேடி வாசிப்பது சாலச் சிறந்தது. வாசிப்போடு மாத்திரம் நின்று விடாமல் அதில் குறிப்பெடுத்துக் கொள்வது மிகவும் சிறந்தது.

''யார் தேடுகிறாரோ அவர் பெற்றுக் கொள்வார்''

**பாடத்திற்கு, எங்களது அர்ப்பணம்**

எந்த ஒரு பாடத்தின் சிறந்த அடைவு, ஒரு முறை முயற்சியினூடாக கிடைத்து விடுவது அரிதே. மீண்டும் மீண்டும் முயற்சி செய்வது எங்களது அர்ப்பண சிந்தனையை ஊக்குவிக்கிறது. சிரமத்தை பொருட்படுத்தாது பாடங்களில் கூடிய கவனம் செலுத்துவது ஆரோக்கியமான கற்றலுக்கு வலுசேர்க்கும்.

இவ்வாறு செயற்படும்போது எங்களை அறியாமல் புத்தகங்களை சீர் செய்து நேர்த்தியாக்குவோம். தேட வேண்டிய வேட்கை உருவாகும். இவ்வாறு எங்களது வெற்றிக்கான பாதை திறந்து விடப்படும். எனவே நாம் எதிர்காலத்தில் ஒரு கற்றறிந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்குவது திண்ணமே.

ஜிப்ரான் ஜவாத்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்




- இத்தினம் வருடாந்தம் டிசம்பர் 3 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- மாற்றுத் திறனாளி என்பவர் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவரால் சில செயல்களை செய்ய முடியாமல் போய் விடுகின்ற காரணத்தால் அவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.
- இது மரபணுவினால் பிறப்பிலேயே ஏற்படும் மாற்றங்கள், தாயின் கருவில் இருக்கும் போதோ அல்லது பிறந்த உடனே ஏற்படும் நோய்கள் மூலம் ஏற்படும் மாற்றங்கள், நோயினாலோ அல்லது விபத்திலோ ஏற்படுபவன ஆகும்.
- இலங்கையில் 7% த்தினர் மாற்றுத் திறனாளிகள் ஆவர்.
- 2014 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் தொழில்நுட்பமின்றி நீடித்து நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இல்லை என்பதாகும்.

# நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வகுப்பறை

- இலங்கையின் முதலாவது நவீன தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வகுப்பறை 2014 டிசம்பரில் ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் திறந்து வைக்கப் பட்டது.
- இது கொரிய அரசாங்கத்தின் அன்பளிப்பில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.




திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo



# சமாதான உச்சி மாநாடு விருது

- நோபல் பரிசு வென்றவர்களின் 14 வது உச்சி மாநாடு 2014 டிசம்பரில் இத்தாலிய ரோம் நகரில் நடைபெற்றது.
- இதன்போது சமாதான உச்சி மாநாட்டு விருது இத்தாலிய திரைப்பட இயக்குனர் பெர்னாண்டோ பெர்த் தோலுக்சிக்கு வழங்கப்பட்டது.
- 1999 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெறும் நோபல் பரிசு வென்றவர்களின் வருடாந்த உச்சி மாநாட்டில் சமாதான உச்சி மாநாட்டு விருது வழங்கப் பட்டது.
- மேற்படி விருதானது உலகில் கலை மற்றும் கலாசார துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கட்டளைகள் நிறுவனம்

- கைத்தொழிற் துறைகளில் தரமான முகாமைத்துவ முறைமைகளை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் தர நிர்ணய முறைமைகளை பிரபல்யப்படுத்துவதற்குமான தேசிய நிறுவனமாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் அமைந்துள்ளது.
- 1964 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க இலங்கை கட்டளை சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட பின்னர் கைத்தொழில் தர நிர்ணயம் சட்டபூர்வமாக்கப்பட்டது.
- 1965 ஆம் ஆண்டு முதல் இலங்கை கட்டளைகள் பணியகம் அதன் தர நிர்ணய பணிகளை ஆரம்பித்த போதும் 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அதன் பணிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.
- இந்நிறுவனத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு 2014 டிசம்பரில் கொண்டாடப்பட்டது.

## சுதந்திரமாகவும் அமைதியாகவும் சுற்றுலா செல்லக் கூடிய நாடுகள்

- 2015 ஆம் ஆண்டில் சுதந்திரமாகவும் அமைதியாகவும் சுற்றுலா செல்லக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை 10 வது இடம் பெற்றுக் கொண்டது.
- இதில் முதலிடத்தை ஐஸ்லாந்து பெற்றுக் கொண்டது.
- அமெரிக்கா பத்திரிகை ஒன்றில் இவ் அறிக்கை வெளியிடப்பட்டது.

## இலங்கை கால்பந்து சம்மேளனம்

- இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 75 வது ஆண்டு நிறைவு 2014 நவம்பரில் கொண்டாடப்பட்டது.
- இதனை நினைவுகூரும் முகமாக யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள கால்பந்தாட்ட மைதானம் திறந்து வைக்கப்பட்டது.
- சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பீபா) தலைவராக ஜோசப் பிளட்டரும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவராக ரஞ்சித் ரொட்றிகோவும், ஆசிய கால்பந்தாட்ட கூட்டமைப்பின் தலைவராக ஷேக்சல்மான் பின் இப்ராஹிம் அல் கலீபாவும் விளங்குகின்றனர்.



## பிலிப் ஹியூஸ்

- 2014 நவம்பரில் அவுஸ்திரேலிய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் பிலிப் ஹியூஸ் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.
- அவுஸ்திரேலியாவில் முதல் தர போட்டியான ஷெபீல்ட் ஷீல்ட் தொடரில் தெற்கு அவுஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் அணிகள் மோதும் போட்டி சிட்னியில் நடைபெற்ற வேளை நியூ சவுத் வேல்ஸ் வேகப் பந்து வீச்சாளர் சீன் அபொட் வீசிய பவுன்சர் முறையிலான பந்தினால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.
- 2007 ஆம் ஆண்டு கிரிக்கட் வாழ்க்கையை ஆரம்பித்த இவர், 26 டெஸ்ட் போட்டிகளிலும் 25 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வது ஆசிய விளையாட்டு விழா பதக்க நிலை




- 2014 ஒக்டோபரில் முடிவடைந்த 17 வது ஆசிய விளையாட்டு விழாக்களில் 14 உலக சாதனைகள், 28 ஆசிய சாதனைகள், 87 விளையாட்டு விழா சாதனைகள் உட்பட 129 சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.
- இந்த பதக்க பட்டியலில் இலங்கை அணி (லகிரு திரிமான்ன தலைவர்) ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றதுடன், மேலும் கிரிக்கட் விளையாட்டிலேயே (மகளிர்) வெண்கல பதக்கமும் பெற்றது.
- பதக்க பட்டியலின் பிரகாரம் சீனா, தென்கொரியா, ஜப்பான், கஜகஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் முறையே 1 ஆம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் இடங்களை பெற்றுள்ளன.
- இவ்விளையாட்டு விழாவில் மிகவும் பெறுமதி வாய்ந்த வீரருக்கான சம்சுங் விருது ஜப்பான் நீச்சல் வீரர் கொசக்கே ஹகினோவுக்கு வழங்கப்பட்டது.

# உலக குடியிருப்பு தின தேசிய மாநாடு

- 2014 ஆம் ஆண்டிற்கான உலக குடியிருப்பு தின தேசிய மாநாடு 2014 ஒக்டோபரில் கொழும்பில் நடைபெற்றது.
- இலங்கையில் 21 மில்லியன் சனத்தொகை வாழ்வதுடன் 77 சதவீதம் கிராமப் புறங்களிலும், 29 சதவீதம் நகர்ப் புறங்களிலும் முழு சனத்தொகையில் 5 சதவீதம் தோட்டப் புறங்களிலும் வாழ்கின்றனர்.
- தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்கள அறிக்கைகளின்படி இலங்கையில் உள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 5.9 பில்லியன்களாவதுடன் (5,905,578) இதில் 81.7 நிரந்தர வீடுகளும், 17.6 புனரமைப்பு செய்யப்பட்ட வீடுகளும் 0.7 (136,000) தற்காலிக வீடுகளுமாகும்.
- இலங்கையில் முழு வீட்டு எண்ணிக்கையில் 83 சதவீதம் உரிமையாளர்கள் வசிக்கும் வீடுகளாகும். 6.4 சதவீதம் வாடகை வீடுகளில் வசிப்போராகும்.
- இலங்கையின் மொத்த சனத்தொகையின் சராசரியில் ஒரு வீட்டில் 04 (3.8) பேர் வசிக்கின்றனர்.
- 2014 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டதில் வீடமைப்பு அபிவிருத்திக்கான மொத்தம் 9,096 மில்லியன் ரூபாய்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.
- சார்க் பிராந்தியத்தில் இலங்கை ஆகக் கூடிய நிரந்தர வீடுகள் கொண்ட நாடாகவும் (81.7) ஆகக் குறைந்த மக்கள் வசிக்கும் கூடாரங்களை கொண்ட நாடாகவும் (136,000) விளங்குகின்றது.

# இலங்கை முன்னணி நிறுவனம்

- 2013/2014 ஆம் நிதியாண்டிற்காக இலங்கையின் பொருளாதார விருத்திக்கு அச்சாணிகளாக திகழ்ந்த நிறுவனங்களுள் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் முதலாம் இடத்தை பெற்றுள்ளது.
- இந்நிறுவனம் மொத்த வருமானமாக 89.26 மில்லியன் ரூபாய்களை ஈட்டியுள்ளது.
- இவ்விருதை 1998 ஆம் ஆண்டிலிருந்து Business today தெரிவு செய்து வழங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**


ஆசிரியர்: எம்.ஐ. அப்துல் ரஹீம், மாவனல்லை

**பகுதி A**

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.

1. சுருக்குக. $\frac{1}{3}+\frac{1}{3}$

2. $x$ இன் பெறுமானம் யாது?




3. சுருக்குக. $a^3 \times a$

4. சதுரமொன்றின் பரப்பளவு 36 $cm^2$ எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது?

5. காரணி காண்க. $4m - 2mx$


6. எண் கோலமொன்றின் $n$ ம் உறுப்பு $3n - 1$ எனின் இத்தொடரின் பொது வித்தியாசம் யாது?

7. $\frac{2}{9}=0.2$ இது எவ்வகையான தசமதானமாக அழைக்கப்படுகின்றது.

8. 7, 5, 8, 3, 4, 4, 9 என்ற எண் பரம்பலின் இடையம் யாது?


9. சுருக்குக. $4.7 \times 10$

10. உருவின் சுற்றளவினை $cm$ இல் தருக.




11. ரூ. 400 இன் 25% யாது?

12.





உருவில் $a$, $x$ இன் பெறுமானங்களைக் காண்க.

13. சீரான கதியில் செல்லும் ஒரு வாகனம் 10 நிமிடத்தில் 8 $km$ தூரம் செல்லுமாயின் ஒரு மணித்தியாலத்தில் செல்லும் தூரத்தைக் காண்க.

14. தீர்க்க. $3x = 18$


15. உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோணி ABC ஆனது ஒரு செங்கோண முக்கோணி எனக் காட்டுக.




16. $\log_a m = r \rightleftharpoons a^r = m$ எனின் $3^4 = 81$ என்பதை மடக்கை வடிவில் தருக.

17. புள்ளி A யிலிருந்து கிழக்கு நோக்கி 16$m$ சென்ற ஒருவர் அங்கிருந்து தெற்கு நோக்கி 16$m$ தூரம் சென்று புள்ளி B யை அடைகிறார் எனின் A யிலிருந்து B யின் திசைகோள் யாது?

18. உருவில் $y$ இன் பெறுமானம் யாது?





19. பொ.ம.சி. காண்க. $8a^2b$, $2ab^3$

20. $4 : a = 16 : 20$ எனின் $a$ இன் பெறுமானத்தைக் காண்க.

21. சுருக்குக. $\left[\frac{21}{5}\times\frac{1}{7}\right]-\left[\frac{21}{5}\div 7\right]$

22. உருவில் $\Delta ACE$ யும் $\Delta BDE$ யும் ஒருங்கிசையுமாயின் AB இற்கு சமமான பக்கம் யாது?




23. வட்டமொன்றின் சுற்றளவு எனின் அதன் விட்டத்தின் நீளம் எத்தனை அலகுகள்
(Hint : வட்டத்தின் பரிதி - $\pi d$)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சுருக்குக. $\dfrac{0.5 \times 0.3}{0.5 - 0.2}$

25. விரித்து எழுதுங்கள் $(t - 7)^3$

26. உருவில் $x$ இன் பெறுமானத்தை பாகையில் தருக.





27. $y = 3x - 2$ எனும் நேர்கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க.

28. A, B என்பன இரு மூட்டுள்ள தொடைகளாகும்.
A = (2, 4, 8)
B = (2, 6, 10) எனின் $n(A \cap B)$ இனைக் காண்க.

29. $a^2 - b^2 = (a + b)(a - b)$ எனின் காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.
$108^2 - 8^2$

30. இடைவெளி நிரப்புக.
புள்ளி $x$ இன் அமைவானது
..................................
..................................
அசையும் புள்ளியின் ஒழுங்கில் காணப்படுகின்றது. (2 X 20 = 40 புள்ளிகள்)




## பகுதி *B*

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.

01. வியாபாரி ஒருவர் ரூபா 4500 இற்கு வாங்கிய பொருள் ஒன்றை 25% இலாபம் வைத்து விலை குறிக்கின்றார்.

i. அவர் எதிர்பார்த்த இலாபம் எவ்வளவு? (3 புள்ளிகள்)

ii. குறித்த விலையைக் காண்க. (2 புள்ளிகள்)

iii. விற்பனையின் போது 10% கழிவு வழங்கினால் கழிவு யாது? (3 புள்ளிகள்)

iv. விற்ற விலையைக் காண்க. (2 புள்ளிகள்)

---

❖ பகுதி ***A*** இலிருந்து ஏதாவது 5 வினாக்களுக்கும் பகுதி ***B*** இலிருந்து 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

❖ ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

❖ உருளையின் வளைமேற்பரப்பு $2\pi r h$, வட்டத்தின் பரப்பு $\pi r^2$

---

## பகுதி *A*

01. ராசிட், ராஜன் ஆகிய இரு நண்பர்களும் முதலீடு செய்து ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தனர். அது பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.


| ராசிட் | |
|---|---|
| முதலீடு | முதலீடு செய்த திகதி |
| ரூ. 45,000 | ஜனவரி - 01 |
| **ராஜன்** | |
| முதலீடு | முதலீடு செய்த திகதி |
| ரூ. 60,000 | மே 01 |

i. அவர்கள் முதலீடு செய்த தொகையினை காலத்தின் அடிப்படையில் எளிய விகிதமாக தருக. (4 புள்ளிகள்)

ii. அவர்களுக்கு வருட இறுதியில் ரூ. 92,000 இலாபமாக கிடைத்தது. இவ்விலாபத் தொகையிலிருந்து ரூ. 24000 ஐ வாடகையாக செலுத்தினால் எஞ்சிய இலாப தொகையினை காண்க. (2 புள்ளிகள்)

iii. வினா (i) இல் நீங்கள் பெற்ற விகிதத்தின் அடிப்படையில் எஞ்சிய இலாபத் தொகை பகிர்ந்தளிக்கப்படுமாயின் ராசிட் பெறும் இலாபத்தை காண்க. (4 புள்ளிகள்)

02.




i. தரப்பட்டுள்ள கோவையை விரித்து எழுதுங்கள். $(3x + 5)^2$ (3 புள்ளிகள்)


ii. செவ்வகத்தின் பரப்பளவைக் காண்பதன் மூலம் $(2x + 3)(x + 4)$ எனும் கோவையைப் பெருக்குக. (3 புள்ளிகள்)

iii. சதுரமொன்றின் ஒரு பக்க நீளத்தின் 3 மடங்கிலிருந்து 2 அலகுகள் குறைத்தும் மற்றைய பக்கத்தின் இரு மடங்குடன் 1 அலகு கூட்டியும் புதிய தொரு செவ்வகம் உருவாக்கப்படுகின்றது.

சதுரத்தின் பக்க நீளம் a எனக் கொண்டு புதிய செவ்வகத்தின் பரப்பளவு $6a^2 - a - 2$ எனக் காட்டுக. (4 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


03. 


a) உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி

i. $l$ இன் நீளத்தைக் காண்க. (3 புள்ளிகள்)


ii. உருவின் சுற்றளவைக் காண்க. (2 புள்ளிகள்)

b) உருவில் செங்கோண முக்கோணி ADC யும் அரைவட்டம் அடர் ABC யும் பொருத்தப்பட்டுள்ள கூட்டுரு தரப்பட்டுள்ளது.





i "வில் ABC யின் நீளமானது பக்கம் AD இன் அரைவாசியிலும் பார்க்க குறைவானது" என ஹிபா என்ற மாணவி குறிப்பிடுகிறாள். இக்கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக. (3 புள்ளிகள்)

ii. CD = 48 cm எனின் உருவின் சுற்றளவை cm இல் தருக. (2 புள்ளிகள்)

04. 


a) உருவில் உள்ள தரவுகளை அவதானித்து x, y, m இன் பெறுமானங்களைக் காண்க. (3 புள்ளிகள்)

b) உருவில் வட்டத்தின் மையம் O, BO = OC, $A\hat{O}B = C\hat{O}D$ எனின்





c) $\Delta AOB \equiv \Delta COD$ எனவும் (5 புள்ளிகள்)

d) AB = CD எனவும் காட்டுங்கள் (2 புள்ளிகள்)

05. i. சுருக்குக. $3-2(a-1)+5a$

ii. காரணி காணுங்கள் $P^2-3P-28$




iii. உருவில் தரப்பட்டுள்ள சதுரங்களின் பரப்பளவுகளைப் பயன்படுத்தி நிழற்றப்பட்ட பிரதேசத்தின் பரப்பளவினை x, a சார்பில் தருக.

06. 50 புள்ளிகளைக் கொண்ட கணிதச் சோதனையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| புள்ளிகள் | நடுப் பெறுமானம் | மாணவர்களின் எண்ணிக்கை $f$ | $fx$ |
|---|---|---|---|
| 02-08 | 05 | 3 | 15 |
| 09-15 | 12 | 4 | 48 |
| 16-22 | | 7 | |
| 23-29 | 26 | 13 | 338 |
| 30-36 | 33 | 8 | |
| 37-43 | | 3 | 120 |
| 44-50 | 47 | 2 | 94 |
| | | $\sum f =$ ...... | $\sum fx =$ ...... |

i. அட்டவணையைப் பிரதி செய்து இடைவெளிகளை நிரப்புக. (6 புள்ளிகள்)


ii. இப்பரம்பலின் ஆகார வகுப்பு யாது? (1 புள்ளி)

iii. இடையைக் கணிக்க. (2 புள்ளிகள்)

iv. ஒருவர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டால் அவர் 29 புள்ளிகளிலும் அதிகமாக பெற்றிருப்பதற்கான நிகழ்தகவு யாது? (1 புள்ளி)

## பகுதி B

07. ஆரம்ப பிரிவு மாணவர் அப்ஸீன் போத்தலில் நீர் நிறைக்கும் போட்டிக்கு பயிற்சியில் ஈடுபடுகின்றான். அவன் புள்ளி A யிலிருந்து ஓடிச் சென்று வாளியில் உள்ள நீரை சிறிய பாத்திரம் ஒன்றில் எடுத்து வந்து போத்தலை நிரப்புகிறான்.




i. முதல் மூன்று தடவைகள் நீரை நிரப்புவதற்கு ஆரம்பத்திலிருந்து அவன் ஓடிய தூரத்தை கோலமாகத் தருக. (2 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. இக்கோலத்தின் n ம் உறுப்பைக் காண்க. *(2 புள்ளிகள்)*

iii. 8 ஆவது தடவை நிரப்புவதற்கு ஓடிய மொத்த தூரம் யாது? *(2 புள்ளிகள்)*

. எத்தனையாவது தடவை நிரப்புவதற்காக அவன் 108 m ஓடியிருப்பான்? *(2 புள்ளிகள்)*

v. அவன் எடுத்து வந்த நீரின் 2/3 பகுதி விரயமாகியிருப்பின் 375 ml போத்தலை நிரப்ப எத்தனை *l* நீர் எடுத்து வந்திருப்பான். *(2 புள்ளிகள்)*

*08.*

a) i. பொ.ம.சி. காண்க. $2a(a+5), (a-5)(a+5)$ *(2 புள்ளிகள்)*

ii. $x=3,\ y=(-4)$ எனின் $2x^2 - y$ இன் பெறுமானத்தை காண்க. *(3 புள்ளிகள்)*

b)

i. $4k^2 - 12k + P$ என்பது நிறைவர்க்க கோவையின் p யின் பெறுமானத்தைக் காண்க. *(2 புள்ளிகள்)*

ii. தீர்க்க $\frac{4x-7}{3} = 1$

*09.*

i. AB = 8 cm ஆகவுள்ள நேர்கோட்டுத் துண்டம் ஒன்றை அமைக்க. *(2 புள்ளிகள்)*

ii. A யிலிருந்து 5.0 cm தூரத்திலும் B யிலிருந்து 6.5 cm தூரத்திலும் இருக்கத்தக்கவாறு புள்ளி C யின் அமைவை, கவராயம், நேர் விளிம்பு என்பவற்றைப் பயன்படுத்திக் காண்க. *(3 புள்ளிகள்)*

iii. AC, BC என்பவற்றை இணைப்பதன் மூலம் ABC யை பூர்த்தி செய்க. *(2 புள்ளிகள்)*

iv. A, C இலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கினை வரைக. *(2 புள்ளிகள்)*

v. அது AC யை வெட்டும் புள்ளியை E எனக் குறிக்க. *(1 புள்ளி)*

*10.*


i. $\sqrt{75}$ இன் பெறுமானத்தை 2 ஆம் அண்ணளவாக்கத்தில் தருக. *(3 புள்ளிகள்)*

ii. சுருக்குக. $1\frac{1}{2} \div 2\frac{1}{4} \times 1\frac{1}{8}$ *(4 புள்ளிகள்)*


iii. $\frac{3}{2}$ ஆனது $\frac{5}{8}$ இன் எத்தனை மடங்கு? *(2 புள்ளிகள்)*

*11.*

a) உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி $\pi = 3.14$ ஆகும்போது நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க. *(5 புள்ளிகள்)*




b) உருவில் 4a விட்டமும் 6a உயரமும் உடைய மூடியற்ற தகரப்பேணி ஒன்று தரப்பட்டுள்ளது.





i. இதன் வளைமேற்பரப்பு $24\pi a^2$ எனவும் காட்டுங்கள். *(3 புள்ளிகள்)*

ii. மொத்த மேற்பரப்பளவை a, π சார்பில் தருக. *(2 புள்ளிகள்)*

*12.*

a) செங்கோண முக்கோணி ஒன்றின் செங்கோணம் தவிர்ந்த இரண்டு கூர்ங் கோணங்களுக்கிடையிலான விகிதம் 1:2 எனின் அக்கோணங்கள் இரண்டினதும் பெறுமானங்களையும் காண்க. *(3 புள்ளிகள்)*

b) உருவில் $\Delta ABC, \Delta BCD$ என்பன இரு சமபக்க முக்கோணிகளாகும். $A\hat{B}C = B\hat{C}D$ எனின்





i. BOC ஓர் இரு சமபக்க முக்கோணி எனவும் நிறுவுங்கள். *(4 புள்ளிகள்)*

ii. $A\hat{B}D = A\hat{C}D$ எனவும் நிறுவுங்கள். *(3 புள்ளிகள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்...




கடந்த இதழில் மீத்திறன், ஆக்கத்திறன் உள்ள பிள்ளைகளை எவ்வாறு இனங்காண்பது, அவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும் என்பன தொடர்பில் கலந்துரை யாடினோம். இந்த இதழில் விசேட வழிகாட்டல் தேவையுடைய மாணவர்களின் ஏனைய பிரிவுகளைச் சற்று விரிவாக நோக்குவோம்.

# விஷேட வழிகாட்டல்

## தேவையுடையவர்களா நீங்கள்?

வஹாப் ஏ. ஹனீபா (இஸ்லாஹி)

### உடற் குறைபாடுடைய பிள்ளைகள்

பார்வை, கேள்வி, பேச்சு, அங்கங்கள் மற்றும் உடலியக்கம் போன்றவற்றில் குறைபாடுடையவர்கள், உடற்குறைபாடுடையவர்கள் என அழைக்கப்படுவர். இவர்களுள் பார்வையற்றோர், காதுகேளாதோர், வாய் பேசாதோர், வலது குறைந்தோர் போன்றவர்களுக்கு விசேட பாட சாலைகள் உள்ளன. அவர்கள் அங்கு சென்று கல்வி கற்க முடியும். ஓரளவு உடற்குறைபாடுடையவர்கள் சாதாரண பாடசாலைகளில் கல்வி பயில்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அவர்களுக்கு விசேட வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. கல்வியற் கல்லூரிகளில் வழங்கப்படும் டிப்ளோமாப் பாடநெறிகளில் தற்போது இத்துறைக்கென விசேடமாக ஆசிரிய மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். தவிர, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் விசேட தேவைகள் கற்கைநெறி என்ற பட்டப் பின் டிப்ளோமாப் பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

#### பார்வைக் குறைபாடுடையோர்

சில மாணவர்கள் புத்தகங்களைத் தமது கண்ணுக்கு மிக மிக அருகில் அல்லது மிகத் தூரத்தில் வைத்து வாசிப்பார்கள், சில மாணவர்களுக்கு கண் சிவத்தல், கண் வீக்கமடைதல், புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினால் கண்ணிலிருந்து நீர் வடிதல், கண் கூசுதல் மற்றும் அடிக்கடி தலை வலி ஏற்படுதல் போன்ற பிரச்சினைகளை அனுபவிக்கலாம். இதனால் மாணவர்களின் கற்றலில் உள்ள ஆர்வம் குன்றவும் கற்றலில் வெறுப்பு ஏற்படவும் காரணமாக அமையலாம்.

இதன்போது இத்தகைய மாணவர்களுக்கு விசேட உதவிகள் தேவைப்படுகின்றன. எனவே, உரிய அதிகாரிகளிடம் முறையிட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான உதவிகளையும் வழி காட்டல்களையும் பெற்றுக் கொண்டு கல்வியில் முன்னேற இவர்களுக்கு அதிகம் வாய்ப்புக் கள் காணப்படுகின்றன.

### கேள்விக் குறைபாடுடையவர்கள்

வித்தியாசமான ஒலிகளைக் கிரகிக்கவோ பிரித்தறியவோ முடியாமல் தவறுதலாக விடயங்களை விளங்குதல், சத்தத்தை உயர்த்திப் பேசுதல், பிழையான உச்சரிப்பு போன்ற சிக்கல்களை இத்தகைய மாணவர்களிடம் அவதானிக்கலாம். இத்தகைய மாணவர்கள் மருத்துவச் சிகிச்சை மற்றும் விசேட உபகரணங்கள் மூலம் நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக பாடசாலை மற்றும் பெற்றோரின் விசேட வழிகாட்டல் அவசியப்படும்.



### பேச்சுக் குறைபாடு

சொற்களைத் திருத்தமாக வாசிக்க முடியாமை, ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் திக்கித் திக்கிக் கூறுதல், திக்குதல் மற்றும் மிக மெதுவாகப் பேசுதல் போன்றன பேச்சுக் குறைபாடாகும்.

திக்குவாய் என்ற பிரச்சினை நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் இரண்டு வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஆரம்பமாகின்றது. திக்குவாய் ஏற்படுவதற்குத் தூண்டியாக அமையக் கூடிய காரணிகள்.

- குழந்தைப் பருவத்தில் தாயைப் பிரிவது
- நெருங்கிய உறவினர் ஒருவர் மரணித்தல்
- புதிய சூழலுக்கு இடம்பெயர்தல்
- தீவிர தண்டனை, துன்புறுத்தல் போன்றவற்றுக்குட்படுதல்

இன்னும் இதுபோன்று வேறு பல காரணிகளும் உள்ளன.

இத்தகைய குறைபாடுகள் உங்களுக்கோ அல்லது உங்களுடைய உறவினர் அல்லது நண்பர்கள் அல்லது வேறு ஒருவருக்கோ காணப் படுமாயின் உளவளத்துணை ஆலோசகர் மற்றும் பேச்சுப் பரிகாரி போன்றோரிடம் சென்று உதவி பெறலாம்.

### கற்றலில் பின்தங்கியோரும் மெல்லக் கற்போரும்

கற்றலில் பின்தங்கல், மெல்லக் கற்றல் ஆகிய இரு சொற்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. ஒரு மாணவன் தான் படிக்க வேண்டிய வகுப்பிலும் பார்க்க கீழுள்ள வகுப்பில் காணப்படுவாராயின் அவர் கற்றலில் பின்தங்கியவர் எனப்படுகிறார். கற்றலில் குறைபாடுடையோரும் மெதுவாக அல்லது தாமதித்துக் கற்போரும் மெல்லக் கற்போர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆரம்ப காலத்தில் நுண்மதி ஈவை வைத்து இவர்கள் இனங்காணப்பட்டாலும் பிற்பட்ட காலங்களில் பின்வரும் காரணிகளை வைத்து இனங்காணப் படுகின்றனர்:

- பாட அடைவுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லைக்குரிய புள்ளிகளைப் பெறத் தவறுதல்
- ஒரு வகுப்பு அல்லது பல பாடங்களில் அல்லது ஒரு பாடத்தில் குறைவாக இருத்தல்

### பின்தங்கிய நிலைக்கான காரணிகள்

#### வீட்டுச் சூழல் தொடர்பான காரணிகள்

- பெற்றோரின் வறுமை, சேர் வாழ்வு, இட வசதி குறைந்த வீடு
- பாடசாலை நேரங்களில் பிள்ளைகளை வேலையில் ஈடுபடுத்தல்
- குடும்பத்தில் பிளவு, பெற்றோர் நீண்ட காலம் வீட்டில் இல்லாமை
- பெற்றோரின் கல்வித் தரக் குறைவு, அறியாமை
- அளவுக்கதிகமான கற்றல் சுமை

#### பாடசாலை தொடர்பான காரணிகள்

- பிழையான கற்பித்தல் முறை
- மாணவர்களின் தனியாள் வேறுபாட்டைக் கருத்திற் கொள்ளாமல் ஆசிரியர் கற்பித்தல்
- ஆசிரியர் - மாணவர் தொடர்புகளில் முரண்பாடுகள்
- அளவுக்கதிகமான கற்றல் சுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றலில் ஆர்வமற்ற சகபாடிகளின் குழு அங்கத்துவம்
- அடிக்கடி பாடசாலையை மாற்றுதல்

**தனியாள் தொடர்பான காரணிகள்**

- நுண்மதி குறைவு
- உடல், உளக் குறைபாடுகள்
- போஷாக்குக் குறைபாடு, உடலாரோக்கியமின்மை, நோய்
- முதிர்ச்சிக்கு முன் கற்றலை ஆரம்பித்தல்
- மனவெழுச்சிச் சிக்கல்கள்
- பாடசாலை நேரங்களில் வேலைக்குச் செல்லுதல்
- வீணான பொழுதுபோக்கு
- மோசமான நண்பர்கள் கூட்டத்தில் அங்கம் வகித்தல்
- போதைப் பொருள் பாவனை, காதல் விவகாரம்

நீங்களோ அல்லது மற்றுமொருவரோ கற்றலில் பின்தங்கியவராக இருந்தால் மேற்சொன்ன ஏதும் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றனவா அல்லது தாக்கம் செலுத்தியதா என்று சற்று ஆராய்ந்து பாருங்கள். தனியாள் தொடர்பான காரணிகள் அல்லாத ஏனைய காரணிகளால் பாதிப்பு ஏற்படுகிறது எனில், பெற்றோர் ஆசிரியர்களுடன் நிதானத்துடனும் அழகிய முறையிலும் கலந்துரையாடி தமது பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயற்சியுங்கள்.

இத்தகைய கற்றலில் பின்தங்கிய மாணவர்களுடன் ஆசிரியர்களும் பெற்றோரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கல்வியியலாளர்களும் உளவியலாளர்களும் நிறைய விடயங்களை முன்வைத்துள்ளனர். அவர்கள் நமது பிரச்சினைகளை இனங்காணத் தவறும் சந்தர்ப்பத்தில் மாணவர்களாகிய நாம் தமக்கும் தம் போன்ற மாணவர்களுக்கும் உதவ முன்வருவதுதானே யதார்த்தம். ஆனால், நடுநிலை, ஒழுக்கம், கண்ணியம், விழுமியங்கள், தகுதி நிலை என்பன நிச்சயம் மதிக்கப்படவும் பேணப்படவும் வேண்டும் என்பதை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மறந்து விடாதீர்கள்.

**நீங்கள் எவ்வாறு கற்றலை மேம்படுத்தலாம்?**

- தொடர்ச்சியாகப் பல மணி நேரம் படிக்காமல் நேரத்தைச் சிறிய இடைவெளிகளாகப் பிரித்து கொஞ்சம் கொஞ்சமாகப் படித்தல்.
- பாடங்களைச் சிறு அலகுகளாகப் பிரித்துப் படித்தல்.
- படித்த பாடங்களைத் திரும்பத் திரும்ப மீட்டுதல்.
- விரைவாகக் கற்பதை விட திருத்தமாகக் கற்பதற்கு முயற்சித்தல்.
- பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் விசேட உதவிகளை எவ்வாறு பெறலாம் என்பதை நன்கு சிந்தித்துச் செயற்படல்
- கற்றல் வழிமுறைகளையும் ஞாபகத்தை மேம்படுத்துவதற்கான உத்திகளையும் அறிந்து செயற்படுத்தல்
- தமது பிரச்சினைகளைத் தீர்க்க என்ன வழி என்பதை அவரவர் தேடி அறிந்து அவற்றை நிவர்த்திக்க சுய முயற்சி எடுத்தல்.

**கற்றலில் இடர்பாடுடையோர்**

கற்றலில் இடர்பாடுடைய மாணவர்கள் ஆரம்பக் கல்வி நிலையில் வாசித்தல், எழுதுதல், எண் ஆகியவற்றைக் கற்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்குவர். நீங்களோ அல்லது உங்களில் ஒருவரோ அல்லது வேறு உறவினர்களின் பிள்ளைகளோ இத்தகைய இடர்பாடுகளை எதிர்நோக்குபவர்களாக இருக்கலாம். இக்குறைபாடுகளுள் சில வருமாறு:

- எழுதுதல், வாசித்தலில் இடர்பாடு - Dyslexia
- எண்சார் குலைவு
- கவனித்தல் குறைபாட்டுக் கோளாறு
- கவனித்தல் குறைபாடு, அதீத செயற்பாட்டுக் கோளாறு


இவ்வாறு கற்றலுக்குச் சவாலான பல இடர்பாடுகளும் குறைபாடுகளும் உங்களுக்கு முன்னால் காணப்படலாம். அவற்றை முறியடித்து எதிர்காலத்தை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள தமக்கு எத்தகைய பிரச்சினைகள் உள்ளன, எத்தகைய வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன என இனங்காண்பது முக்கியமாகும். எனவே பிறரின் உதவி ஒத்தாசையுடன் தங்களைத் தாங்களே இனங்காண முயற்சிப்பதுடன் அவற்றுக்கான தீர்வுகளையும் பெற முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ்.

**உசாத் துணைகள்**

1) விமலா கிறிஷ்ணபிள்ளை *(2009)* வழிகாட்டலும் ஆலோசனையும், *(4 ஆம் பதிப்பு)* சேமமடு பதிப்பகம், கொழும்பு.
2) Kemp. G, Smith. M, Segal. J (2014). Learning Disabilities and Disorders Accessed 10th December 2014, available from http://www.helpguide.org/articles/learning-disabilities/learning-disabilities-and-disorders.htm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானம்

10, 11 ஆம் தரம் மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## தரம் - 10 | உயிரியல் | இரசாயன அடிப்படை

❖ அங்கிகளின் உடலில் 25 வரையான மூலகங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பிரதான 4 மூலகங்கள் C, H, O, N என்பவையாகும்.

❖ உயிரங்கிகளின் உடலிலுள்ள பதார்த்தங்கள் உயிர்ச் சடப்பொருட்கள் எனப்படும். இவை பின்வரும் 2 வகைப்படும்:

*01.* சேதன உயிர்ச் சடப்பொருள்

❖ பிரதான கூறாக காபனைக் கொண்டிருப்பவை. இவற்றில் பின்வரும் 4 கூறுகள் முக்கியமானவை. இவை உயிரியல் மூலக்கூறுகள் எனப்படும்.

(உ+ம்) 1. கபோவைதிரேற்று C, H, O
2. புரதம் C, H, O, N, S
3. இலிப்பிட்டு C, H, O
4. நியூக்கிளிக்கமிலம் C, H, O, N, P

*02.* அசேதன உயிர்ச் சடப்பொருள்

❖ இவற்றில் பிரதான கூறாக காபன் காணப்படாது.

(உ+ம்) 1. நீர் ($H_2O$)
2. வாயுக்கள் ($O_2$, $N_2$, $CO_2$)
3. கனியுப்புக்கள் (N, Ca, P, K ....)

### காபோவைதிரேற்று *(Carbohydrate*

❖ புவி மேற்பரப்பில் அதிகளவு காணப்படும் சேதனச் சேர்வை இதுவாகும்.

இதன் மூலக்கூற்றுச் சூத்திரம்: $C_x(H_2O)_y$ ஆகும்.

❖ காபோவைதிரேற்றின் வகைகள்

| கூட்டம் | உதாரணம் |
|---|---|
| ஒரு சக்கரைட்டு | குளுக்கோசு, பிரக்றோசு, கலக்றோசு, றைபோசு, கிளிசரல்டிஹைட்டு |
| இரு சக்கரைட்டு | சுக்ரோசு, மோல்றோசு, இலக்றோசு |
| பல் சக்கரைட்டு | செலுலோசு, மாப்பொருள், கிளைக்கோஜன் |

❖ காபோவைதிரேற்றின் முக்கியத்துவம்

1. அங்கிகளில் சக்தியை வழங்கும் பிரதான சக்தி முதல் இதுவாகும்.
2. அங்கிகளில் சேமிப்புணவாகக் காணப்படுகின்றது.
3. அங்கிகளின் கட்டமைப்புக் கூறாகத் தொழிற்படுகின்றது.
4. நியூக்கிளிக்கமிலங்களின் கூறாகக் காணப்படுகின்றது.

### புரதம் *(Protein)*

❖ இது அமினோ அமில மூலக்கூறுகளினால் உருவாக்கப்படும் சிக்கலான பல் பகுதிய சேதன சேர்வை ஆகும்.

❖ எல்லாப் புரதங்களினதும் ஆக்கக் கூறாக அமினோ அமிலம் காணப்படும்.

அதன் சூத்திரம் $NH_2$-C↑-COOH

### புரதங்களின் முக்கியத்துவம்

1. சக்தியை பிறப்பிக்கப் பயன்படுகின்றது.
2. அங்கிகளின் உடற் கட்டமைப்புக் கூறுகளை உருவாக்கப் பயன்படும்
3. நொதியம், ஓமோன்களாகத் தொழிற்படுகின்றது.
4. பிறபொருள் எதிரியாகத் தொழிற்படுகின்றது.

### இலிப்பிட்டு *(Lipid)*

❖ இது கொழுப்பமிலம், கிளிசரோல் எனும் கூறுகள் சேர்ந்து உருவாகும் சேதனப் பதார்த்தமாகும்.

❖ இது நீர் உட்பட வேறு முனைவுத் தன்மையான கரையான்களில் கரையாது. எனினும் சேதனக் கரைப்பான்களில் கரையும்.

### இலிப்பிட்டின் முக்கியத்துவங்கள்

1. சக்தி முதலாகத் தொழிற்படுகின்றது.
2. முதலுரு மென்சவ்வின் பிரதான கூறாகக் காணப்படுகின்றது.
3. உடல் வெப்பநிலையைப் பேணுவதில் பங்கு கொள்கின்றது.
4. உட்புற அங்கங்களைப் புற அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாக்கின்றது.
5. சில ஓமோன்களின் உற்பத்தியில் உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூக்கிளிக்கமிலம் *(Nucleic Acid)*

- இது நியூக்கிளியோரைட்டுக்களினால் உருவான நேர்கோட்டுப் பல் பகுதியம் ஆகும்.
- இது பிரதான 3 கூறுகளினால் ஆக்கப்பட்டுள்ளது.
  1. நைதரசன் உப்பு மூலம்
  2. பென்றோசு வெல்லம்
  3. பொசுபேற்றுக் கூட்டம்
- நியூக்கிளிக்கமிலம் இரு வகைப்படும்.

1. DNA 2. RNA

## நியூக்கிளிக்கமிலத்தின் முக்கியத்துவம்

1. கருவினுள் பாரம்பரியத் தகவல்களை சேமிப்ப துடன் சந்ததி வழியே கடத்தப்படவும் உதவு கிறது.
2. புரதத் தொகுப்பில் உதவுகிறது (RNA).
3. கலத்தின் உயிர்ச் செயற்பாடுகளை கட்டுப்படுத் துவதில் பங்காற்றுகின்றது.
4. DNA களில் நிகழும் விகாரம் அங்கிகளின் கூர்ப் பிற்கு உதவுகிறது.

01. பின்வரும் வினாக்களுக்கு கீழே அடைப்பினுள் தரப்பட்ட விடைகளைப் பயன்படுத்தி எழுதுக.

1. பழுத்த பழங்கள், தேன் என்பவற்றில் காணப் படும் வெல்லம்?
2. மாப்பொருளை நீரேற்றும் போது தோன்றும் இடைவிளைவு?
3. இலக்றோசு வெல்லம் காணப்படும் ஒரு பொருள்?
4. விலங்குகளின் உடலில் காபோவைதிரேற்று காணப்படும் வடிவம்?
5. உடலில் தொடுப்பிழையத்தில் காணப்படும் புரதம்?
6. குருதி உறைதல், என்பு வளர்ச்சி என்பவற்றிற்கு அவசியமான கனியுப்பு?
7. நியூக்கிளிக்கமிலம், ATP என்பவற்றின் மூலக் கூற்று கனியுப்பு
8. எவ்விற்றமின் குறைபாட்டினால் ஒஸ்ரியோ போரோசிஸ் ஏற்படும்?

(கிளைக்கோஜன், மோல்றோசு, கல்சியம், விற்ற மின் D, தாய்ப்பால், குளுக்கோசு, விற்றமின் B, பொசுபரசு, கொலாஜன், தேன்)

02. சில (A, B, C) உணவுப் பொருட்களின் கூறுகளை இனங்காண்பதற்கான சோதனை முறைகள் பின் வருமாறு:

A. இதன் கரைசல் சிறிதளவை சோதனைக் குழா யில் இட்டு அதனுள் பீலிங்கின் கரைசல் சேர்த்து வெப்பப்படுத்தப்படல்.

B. இதன் திரவப் பதார்த்தம் சிறிதளவைப் பெற்று அதனுள் 5% சோடியம் ஐதரொட் சைட்டு கரைசல் இட்டு, பின் 1% செப்பு சல்பேற்று கரைசல் துளிகளை சேர்த்தல்.

C. இதன் சிறிதளவு திரவத்தை எடுத்து அதனுள் சூடான iii கரைசல் துளிகள் சேர்த்துக் குலுக் குதல்.

i. மேற்படி A, B, C ஆக அமையும் பதார்த்தங் களின் வகைகளையும் அவற்றின் சோதனையின் போதான அவதானத்தையும் குறிப்பிடுக.

ii. B இற்குரிய பரிசோதனை முறையின் பெயர் என்ன?

iii. பின்வருவனவற்றில் காணப்படும் புரதங்களின் பெயர்களை எழுதுக.

a) கோதுமை


b) உரோமங்கள், தலைமயிர்

c) முட்டை வெள்ளைக்கரு

iv. சக்தியை பிறப்பிக்க உதவும் பிரதான வகை போசணை வகை எது?

v. அதிகளவு சக்தியை உருவாக்கக் கூடிய போசணை வகை எது?

vi. நியூக்கிளிக்கமிலத்தின் ஆக்கக்கூறின் கட்டமைப்பு பின்வருமாறு:




a) இக்கூறின் பெயர் யாது?

b) இதிலுள்ள x, y, z எனும் பகுதிகளின் பெயர் களை எழுதுக.

vii. தாவரங்களில் நைதரசன், கல்சியம் என்பற்றின் குறைபாடு காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை எழுதுக.

viii. விற்றமின்களில் நீரில் கரைபவை எவை? கொழுப் பில் கரைபவை எவை?

### விடைகள்

i.

A. குளுக்கோசு - பச்சை, மஞ்சள், செங்கட்டிச் சிவப்பு நிறம் தோன்றும்.

B. புரதம் - ஊதா நிறம் தோன்றும்.

C. இலிப்பிட்டு - சிவப்பு நிற எண்ணெய்க் கோளங் கள் தோன்றும்.

ii. பையூரேற்றுச் சோதனை

iii. a) குலுற்றென் b) கெரட்டீன்

c) அல்புமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. குளுக்கோசு - காபோவைதிரேற்று

v. இலிப்பிட்டு

vi. a) நியூக்கிளியோரைட்டு

b) x - பொசுபேற்றுக் கூட்டம்

y - பென்டோசு வெல்லம்

z - நைதரசன் உப்பு மூலம்

vii. நைதரசன் - வளர்ச்சி குறையும், வெண்பச்சை நோய் ஏற்படும்.

கல்சியம் - இலை நுனி கருகுதல், முனைய ரும்பு இறத்தல்.

viii. நீரில் கரைபவை - விற்றமின் B, C

கொழுப்பில் கரைபவை - விற்றமின் A, D, E, K

## தரம் - 11 | பௌதிகவியல் அலைகள், ஒளியியல்

- அதிர்வு என்பது ஒரு நிலைத்த புள்ளி பற்றி இரு பக்கங்களிலும் ஏற்படும் சந்த இயக்கம் ஆகும்.
- அதிர்வின் காரணமாக அலைகள் உருவாகின்றன. எல்லா அலைகளினதும் வேகம் (V) பின் வரும் சமன்பாட்டினால் குறிப்பிடப்படும்.

$\boxed{V = f\lambda}$ $v$ - வேகம் ($ms^{-1}$)

$f$ - அதிர்வெண் / மீடிறன் (Hz)

$\lambda$ - அலை நீளம் (m)

01. அலைகளை பொறிமுறை அலைகள், மின்காந்த அலைகள் என இருவகைப்படுத்தலாம்.


i. பொறிமுறை அலைகளின் இரண்டு இயல்புகளை எழுதுக.

ii. பொறிமுறை அலைகளை மேலும் 2 வகையாகப் பிரிக்கலாம். அவ்விரு வகைகளை எழுதி அவற்றிற்கு 2 உதாரணங்கள் வீதம் எழுதுக.

iii. மின்காந்த அலைகளின் இயல்புகள் 3 ஐ எழுதுக.

iv. ஒளி அலைகளை விடப் பெரிய அலை நீளத்தையுடைய மின்காந்த அலைகள் இரண்டை எழுதி அவற்றின் ஒவ்வொரு பயனைக் குறிப்பிடுக.

v. கீழே காட்டப்பட்டிருப்பது நீரில் ஏற்படும் அலை ஆகும். இதன் அலை நீளம் யாது? இவ் அலையின் அதிர்வெண் 480 Hz ஆயின் இது பயணிக்கும் வேகத்தைக் காண்க.




### விடைகள்

i.

- இவ் அலைகள் கடத்தப்படுவதற்கு துணிக்கைகள் அவசியம்.
- இவை வெற்றிடத்தில் உருவாகாது, கடத்தப்படாது.

ii. குறுக்கலை - நீரில் ஏற்படும் அலை, இழைகளில் ஏற்படும் அலை.

நீள்பக்க அலை - வளியில் ஒலி பயணித்தல், இசைக்கலை அதிர்வு கடத்தப்படல்.

iii.

- மின்னியல்பையும் காந்த இயல்பையும் ஒருங்கே கொண்டவை.
- இவை வெற்றிடத்தினூடாகவும் கடத்தப்படும். (ஊடகம் அவசியமில்லை)
- வெற்றிடம், வளியில் பொது வேகம் = $3 \times 10^8\ ms^{-1}$

iv. செங்கீழ்க்கதிர் (IR)

- பொருட்களை உலர்த்துவதற்குப் பயன்படும் (வெப்பம்)
- தொலை இயக்கிகளில் பயன்படும்.

நுண்ணலை

- விண்வெளித் தொடர்பாடலில் பயன்படும்,
- வினைத்திறனான உணவு சமைத்தலில் பயன்படும்.

ரேடியோ அலை

- வானொலி, தொலைக்காட்சி ஊடுகடத்தலில் பயன்படும்.
- செய்மதித் தொடர்பாடலில் பயன்படும்.

v. அலைநீளம் $\lambda = 3m$

அலையின் வேகம் $v = f\lambda$

$= 480 \times 3$

$= 1440\ m^{-1}$

> ஒருவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், உடனடியாக சமாதானம் செய்து கொள்ளுங்கள். எப்பொழுதும் மன்னிப்பு கேட்டுக் கொள்வதிலும், தம் குற்றங்குறைகளை ஒப்புக் கொள்வதிலும் முந்திக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.எம். அஸீம் (நளீமி)



# முட்டி மோதி முன்னேறுங்கள்

வருடம் ஆரம்பிக்கின்ற போது எத்தனை எத்தனை எதிர்பார்ப்புகள் நிறைந்திருக்கும். போகப் போக ஆர்வம் குறைந்து அவை மங்கியே போய்விடும். சவால்கள் உங்களுக்கு முன்னால் இல்லையென்றால் சாதனைகள் சாத்தியப்பட்டிருக்காது என்பது மாத்திரமல்ல, நீங்கள் சாமானியராகவே போயிருப்பீர்கள். பத்தோடு பதினொன்றாகி இருப்பீர்கள். இளம் காளையர்கள் நீங்கள். முட்டிமோதி முன்னேற வேண்டிய பருவம் இது. சோர்ந்து விடாதீர்கள்.

உலகத்தைத் தலைகீழாகப் புரட்ட முடியுமா? என ஐன்ஸ்டைனிடம் கேட்டநேரம் சொன்னது போல, உலகத்தை விட பெரிய நெம்புகோலைத் தாருங்கள். புரட்டிக் காட்டுகிறேன் என சொல்லும் தைரியம் வர வேண்டும் உங்களிடம். உங்களைத் தட்டிக் கொடுக்கும் போதும் தலை தடவி விடும்போதும் மாத்திரம் நம்பிக்கை பெறுபவர்களாக இராமல் தள்ளிவிடும் போதும் எழுந்து நடக்கும் தைரியத்துடன் இருங்கள்.

புதிய கல்வியாண்டில் உங்கள் கல்வி வாழ்க்கையின் எத்தகைய சவால்களை எதிர்கொள்ளவும் தயாராக இருங்கள். பரீட்சை என்பது உங்களைப் பரிட்சித்துப் பார்க்கும் களம் என்றால் அதற்கும் தயாராக இருங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு எதுவும் தடையாக அமைந்துவிடக் கூடாது. அவ்வாறு தடையாக வருமாயின் அவற்றைத் தகர்த்து முன்னேறும் ஆற்றல் உங்களிடம் மிகைத்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் லிங்கனின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று, நான் ஜனாதிபதியானால் கறுப்பின மக்களுக்கு விடுதலை அளிப்பேன். அமெரிக்க ஜனாதிபதியான போது அந்த வாக்கை நிறைவேற்ற வேண்டிய தருணம். அப்போதுதான் பிரச்சினை எழுந்தது. கறுப்பின மக்களுக்கு விடுதலை கொடுத்தால் நாம் அமெரிக்காவை இரண்டு நாடுகளாகப் பிரிப்போம் என்றனர் உயர் குடியினர். விடுதலை அளிக்காவிட்டால் கொடுத்த வாக்கு...? மட்டுமல்ல, தமக்கு விடுதலை கிடைக்கும் என நம்பிய கறுப்பின மக்களின் வாழ்க்கை...? கடுமையான சவால். அவை இரு வேறு துருவங்கள். தீர்மானமெடுத்தார் லிங்கன். அமெரிக்கா இரண்டாகப் பிரியாது. கறுப்பின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு விடுதலை கிடைக்கும். நாடே கலகம், போராட்டம்... என கலங்கிப் போயிருந்த நேரத்தில் எடுத்த தீர்மானம் அது. அத்துனை இமாலய சவால்களுக்கு மத்தியில் தான் நினைத்ததை சாதித்துக் காட்டினார் லிங்கன்.

சூழல்கள் எப்போதும் சாதகமாக அமைந்துவிடாது. முட்டிமோதித்தான் முன்னேற வேண்டும். உங்கள் முன்னேற்றத்திற்கு யாரும் எதுவும் எப்போதும் தடையாக அமைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இமாலய சாதனைகளுக்குப் பின்னால் இத்தகைய முட்டிமோதல்கள் நிறைந்துதானிருக்கும்.

எப்போதும் இந்த வீரியம் உங்களிடம் தீயாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அது அணையாதவாறு பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு. சூடான இரத்தம் என்பது அதனைத்தான். விழ விழ எழுந்து கொண்டேயிருங்கள்.

ஆண்டின் ஆரம்பத்தில் மாத்திரமல்ல, தினந் தினம் இந்த சிந்தனையை உங்கள் மனதில் பசுமையாகப் பதித்து முன்னேற வேண்டும். எந்தவொன்றும் அப்படித்தான். போகப் போக வேகம் குறைந்துவிடும். தாகம் தணிந்துவிடும். அனல் அணைந்துவிடும். பற்றியெரியும் தீச் சுவாலை கூட இதற்கு விதிவிலக்கல்ல. எனவே, என்றென்றும் உங்கள் வீரிய உணர்வுகளுக்கு விருந்தளியுங்கள். அவை எப்போதும் உற்சாகமாக இருக்கின்ற போதுதான் உங்களால் நெடுந்தூரம் பயணிக்க முடியும்.

முட்டிமோதி முன்னேறுவதென்றும் அதற்கான பின்வரும் விடயங்களில் இவ்வருட ஆரம்பத்தில் நான் கவனம் செலுத்துவேன் என்றும் திடசங்கற்பம் பூண்டு கொள்ளுங்கள்.

1. இலக்கும் இலட்சியமும் என்ன என்பதை தெளிவாக அறிந்திருங்கள். அதனை நோக்கியே உங்கள் பயணம் அமைந்திருக்க வேண்டும்.
2. சவால்கள் என்ன வடிவில் வரும் என்பதையும் சந்தர்ப்பங்கள் எவ்வாறான வடிவங்களில் காத்திருக்கும் என்பதையும் அறிந்து அவற்றை எதிர்கொள்ளவும் பயன்படுத்தவும் தயாராக இருங்கள்.
3. சாதித்தே தீருவேன் என்ற பிடிவாதம்தான் பலரை சாதிக்க வைத்திருக்கிறது. இந்தப் பிடிவாதம் உங்களிடம் மிகைத்திருக்க வேண்டும். அப்போதுதான் சாதிக்க முடியும்.
4. என்றும் உங்களை உற்சாகமாக வைத்திருங்கள். மனம் லயிக்கும் விடயங்களில் ஈடுபடுங்கள். ஆர்வமில்லாத விடயங்களில் அதிக காலத்தை செலவழிப்பது அர்த்தமற்றது.
5. நீங்கள் எதனை சாதிக்கப் போகிறீர்கள், என்ன வழியில் சாதிக்கப் போகிறீர்கள் என்ற திட்டம் முக்கியம். அதனை வரைந்து கொள்ளுங்கள்.
6. தூரநோக்கும் துறைசார் அறிவும் மிக முக்கியம். எனவே, என்றும் தொலைநோக்கோடு பயணிக்கவும் குறிப்பிட்ட துறைசார் அறிவை பெற்றிருக்கவும் எப்போதும் முயற்சி செய்து கொண்டே இருங்கள்.
7. தோல்விகளிலிருந்தும் கடந்த காலங்களிலிருந்தும் கற்றுக் கொள்வது சிறந்த பயனை அளிக்கும். எனவே, எதிர்காலம் வளமாக, கடந்த காலத்திலிருந்து பெற்ற படிப்பினைகளை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.
8. காலம் மற்றும் நேரம் பற்றிய விழிப்புணர்வு அவசியம். காலம் காத்திருக்காது என்பதையும் நேரத்தை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும் என்பதிலும் விழிப்பாக இருங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட காலம் குறைவு என்பதையும் அதில்தான் உங்கள் சாதனை நிகழ வேண்டும் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.
9. வியூக ரீதியான நகர்வுகள் வெற்றிக்கு வழிகோலும். உங்கள் திட்டம் வெற்றி பெற இத்தகைய வியூக ரீதியான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுங்கள்.
10. சாதித்தே தீருவேன் என உறுதியாக நம்புங்கள். வெற்றி நிச்சயம் என்பதை ஆழ்மனதில் பதித்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களால் வெல்ல முடியும்.

இவ்வளவு காலமும் கழிந்தது போல் கழியாமல் இவ்வருடம் முதல் இனிமேல் சிறந்த முறையில் திட்டமிட்டு இறுதிவரை வெற்றியோடு பயணிக்கத் தயாரான மனோநிலையில் பயணத்தைத் தொடங்குங்கள்; தொடருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

# தொகைநிலைத் தொடரும் தொகாநிலைத் தொடரும்

தொடர்கள்

1. தொகாநிலைத் தொடர்
2. தொகைநிலைத் தொடர்

❖ தொகாநிலைத் தொடர் எனப்படுவது யாது?

ஒரு சொல் இன்னொரு சொல்லை தொடர்ந்து வரும்போது உருபுகளோ, சொல் உருபுகளோ மறையாமல் (தொகாமல்) நிற்கும் தொடர்கள் 'தொகா நிலைத்தொடர்' எனப்படும்.

(எ-டு) பிரசன்யா படித்தாள்
ரதீஸ் எழுதினான்
அழகியது அம்மலர்

❖ தொகாநிலைத் தொடர் எத்தனை வகை? அவை யாவை?

**09 வகைப்படும்**

| | |
|---|---|
| எழுவாய்த் தொடர் | காமிலா விளையாடினாள் |
| விளித் தொடர் | சஹானா, எழும்பு |
| வேற்றுமைத் தொடர் | எனது புத்தகம் |
| வினை முற்றுத் தொடர் | வந்தது மாடு |
| பெயரெச்சத் தொடர் | எழுதாத கவிதை |
| வினையெச்சத் தொடர் | கண்டு களித்தனர் |
| இடைச் சொற்றொடர் | இனி வருவேன் |
| உரிச் சொற்றொடர் | கூர் வாள் |
| அடுக்குத் தொடர் | ஓடு ஓடு |

❖ எழுவாய்த் தொடருக்கும் வினைமுற்றுத் தொடருக்கும் இடையே காணத்தகு வித்தியாசம் யாது?

எழுவாய்த் தொடர் எனப்படுவது, ஓர் எழுவாயைத் தொடர்ந்து பயனிலைச் சொல் ஒன்று இயல்பாகவே தொடர்வதாகும். உதாரணம்: கண் மணி பாடினாள்.

வினைமுற்றுத் தொடர் எனப்படுவது, ஒரு வினைமுற்றைத் தொடர்ந்து இன்னொரு செயர்ச்சொல் வருவதாகும்.

உதாரணம்: வந்தது மாடு

❖ பின்வரும் தொடர்கள் எவ்வகை தொகாநிலைத் தொடர் என இனங்காண்க.

- மாணவர்களே, எழுதுங்கள்
- சிறந்த புத்தகம்
- ஓயாது பெய்தது
- வேறு பொருள்
- சாலச் சிறந்தது
- வீட்டில் நீங்கினான்

மாணவர்களே, எழுதுங்கள் - விளித்தொடர்
சிறந்த புத்தகம் - பெயரெச்சத் தொடர்
ஓயாது பெய்தது - வினையெச்சத் தொடர்
சாலச் சிறந்தது - உரிச் சொற்கள்
வேறு பொருள் - இடைச் சொற்றொடர்
வீட்டில் நீங்கினான் - வேற்றுமைத் தொடர்

❖ தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவையாவை?

06 வகைப்படும்

| | |
|---|---|
| உவமைத் தொகை | மலர்க்கை சிவந்தது |
| வேற்றுமைத் தொகை | மணியோசை |
| பண்புத் தொகை | முக்காலம் |
| உம்மைத் தொகை | எண்ணெழுத்து இகழேல் |
| வினைத் தொகை | ஏவுகணை |
| அன்மொழித் தொகை | பூங்குழல் வந்தாள் |

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எனக்கு வலியுறுத்திக் கூறினார்கள்: அன்பு மகனே! உன் வீட்டில் நீ நுழையும்போது முதலில் குடும்பத்தாருக்கு ஸலாத்தை சொல்! இது உனக்காகவும், உன் குடும்பத்தாருக்காகவும் நன்மையையும், பாக்கியத்தையும் ஈட்டித் தரும்!''
ஆதாரம்: திர்மிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03ஆம் பக்கத் தொடர்...**

பிரார்த்தனைக்கு மிகச் சிறந்த சந்தர்ப்பங்கள்

- ஐங்காலத் தொழுகையின் பின்னர் பிரார்த்தித்தல்.
- இரவின் பிற்பகுதியில் (தஹஜ்ஜதில்) பிரார்த்தித் தல்.
- அதானுக்கும் இகாமத்திற்கும் இடைப்பட்ட பகு தியில் பிரார்த்தித்தல்.
- சுஜூதில் பிரார்த்தித்தல்.
- ஜுமுஆ தினத்தில் பிரார்த்தித்தல்.

இந்த ஒழுங்குகளையும், சந்தர்ப்பங்களையும் கவனத்தில் கொண்டு அதிகமாக அல்லாஹ்விடத் தில் பிரார்த்திப்பதன் மூலம் ரப்போடு எமது உறவைப் பலப்படுத்தி அல்லாஹ்வின் உதவிகளைப் பெற முயற்சிப்போம்.

**17ஆம் பக்கத் தொடர்...**

4. பரீட்சை தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு உங்களுக்குரிய இருக்கைகளில் அமர வேண்டும்.
5. வினாப் பத்திரத்தில் உள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்க வேண்டும்.
6. பரீட்சை நேரத்தை திட்டமிட்ட முறையில் பயன்படுத்த வேண்டும். புள்ளிகளுக்கு ஏற்ப நேரத்தை பங்கீடு செய்ய வேண்டும். ஒரு வினாவை எழுத முன்பு அந்த வினாவை முடிக் கும் நேரத்தை குறித்து வைப்பது நல்லது.
7. வினாக்களை 2 தடவைகள் வாசித்து நன்கு விளங்கிய பின்பே எழுத வேண்டும்.
8. எழுத முன்பு விடை எவ்வாறாக அமையும் என் பதை நன்கு திட்டமிட்ட பின்பு எழுதுவது நல் லது.
9. முதலில் நன்கு தெரிந்த வினாக்களுக்கே விடை எழுத வேண்டும்.
10. எல்லா விடைப் பத்திரங்களிலும் சுட்டெண் களை எழுதுவது அவசியமாகும்.

## 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில்

**சித்தியடைந்தோர் - 2014**




**எம்.எப்.எப். ஹானிம்**
**156**
பு/கனமூலை முஸ்லிம் ம.வி
பஸ்லுல் பாரிஸ்
நஸ்ரா நிசாம்தீன்



**ஆர்.எப். நுஹா**
**166**
முதலைப்பாளி அரசினர் மு.வி.
பள்ளிவாசல் துறை
எஸ். ரஹ்மதுல்லாஹ்
கே. சித்தி நுபைஸா



**எம்.ஏ.எப். ஹிபாஹ்**
**151**
பு/ எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.வி
ஏ.ஆர்.எம். அர்ஷத்
ஆர். ஹிஸாமா



**என்.எம். அஷ்ரி**
**173**
கே/மாவ/ஸாஹிரா தே.பா.
எம்.இஸட்.எம். நியாஸ்
எம்.எப். பஸாஹிரா ஹானிம்



**எம்.ஏ.எம். அஸ்பாக்**
**174**
குளி/ கொடேகுருகம மு.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பின் நோக்கம்



சோதனைகளில் சிக்கித்தவித்திடும் மானிடா
நீ சோதிக்கப்படுவது
தளர்ந்துவிடவல்ல நாளை
இறைவன் முன் சமர்ப்பிக்கப்பட

ஆற்றல்களால் அருள்பாலிக்கப்பட்ட மானிடா
நீ அருள்பாலிக்கப்படுவது
அகம்பாவம் கொள்ளவல்ல – உன்
இறைவனை நெருங்கிட

சாதனைகள் படைக்கப் பிறந்திட்ட மானிடா
நீ சாதிப்பது இவ்வுலகை
ஆட்டிப்படைக்கவல்ல அவை
மறுமையின் சாட்சிகளாய் அமைய

அந்தஸ்துகளால் அலங்கரிக்கப்பட்ட – மானிடா
நீ அந்தஸ்தளிக்கப்படுவது
அசட்டைத்தனமாய் நடக்கவல்ல – நீ
அப்தின் அர்த்தத்தைக் கற்றுக் கொள்ள

கவிதைச் சரம்

உமைரா ஜைனுலாப்தீன்
ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

# இதயத்தில் அவள்தான்



இரைக்கும் கடல்
தாண்டி
உழைப்பிற்கு
ஓடினாலும்
இதயத்தில் அவள்தான்

இமைக்கதவுகள்
மூடியபோதிலும்
கன்னத்தில் கோடிடும்
விழி நீர் கசிகின்ற - போதிலும்
இதயத்தில் அவள்தான்


சுரம் வந்து - உடலை
சுட்டாலும் பிறர்
சொல் வந்து
மனதை தைத்தாலும்
இதயத்தில் அவள்தான்

அறுசுவை உணவை
நண்பர்களுடன்
ருசிக்கையிலே
நெஞ்சுக்குள் அடைக்கிறது
தொண்டைக் குழியுடன்
இதயத்தில் அவள்தான்

அனுதினமும்
இறையோனை
இறைஞ்சுகிறேன்
அன்புக்காய்
ஏங்குகிறேன்
இதயத்தில் அவள்தான்
என் அன்னை

எம்.எப். றஸா
தரம் - 10
த/மூ/அந்-நஹார் மகளிர் ம.வி.

# இலட்சியப் பயணம்



நண்பியே
நீ வாழும் வாழ்க்கை
சுவனத்தை நோக்கிய
இனிய பயணம்

உன் பயணப் பாதை
பஞ்சணை மெத்தை அல்ல
கற்களும் முட்களுமே!

இன்ஷா அல்லாஹ் நீ – அதன்
மீது இரத்தம் துடைத்து
நடப்பாய் என – நான்
எதிர்ப்பார்க்கிறேன்

உன் பயணப் பாதையில்
நீ பல சந்திகளை சந்திப்பாய் – அதில்
பூவைக் கண்டு மயங்கிவிடாதே!
முள்ளைக் கண்டு பயப்படாதே!


பழகிப்போன – எம்
பாதங்களுக்கு பாதை
மாறினாலும் – எம்
பயணம் மாறாது

உமாரா பின்தி முஸம்மில்
தரம் 11
வெலம்பொட மு.ம.வி.
வடதெனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. அருகில் தரப்பட்டுள்ள இரண்டு எண் சட்டங்களிலும் வகை குறிக்கப்பட்டுள்ள எண்களுக்கு இடையே உள்ள வித்தியாசம்?




i. 3485
ii. 3595
iii. 3585
iv. 3685

2. எண்கோலத்தை அவதானித்து விடை தருக.





i. 26
ii. 28
iii. 32

பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| | பொருள் | பெறுமதி | கொடுத்த பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|---|
| 3. | புத்தகம் | ரூ. 482.00 | ............ | ரூ. 518.00 |
| 4. | கலர் பெட்டி | ரூ. 63.50 | ரூ. 100.00 | ............ |
| 5. | கணிதப் பெட்டி | ............ | ரூ. 1000.00 | ரூ. 98.50 |

6. பாத்திரம் A, பாத்திரம் B ஆகியவற்றிலுள்ள நீரை பாத்திரம் C இனுள் ஊற்றினால் பாத்திரம் C இலுள்ள நீரின் மொத்தக் கனவளவு யாது?





7. மார்ச் மாதத்தின் முதலாவது வாரத்தில் 3 ஆம் திகதி சனிக்கிழமையாயின் அம்மாதத்தின் கடைசி நாள் என்ன நாள்?

8. 4735 எனும் எண் குறியிலுள்ள இலக்கம் 7 இன் இடப் பெறுமானம்?

i. 700 ii. 70
iii. 100 iv. 7000

9. தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் எழுதுக.



பின்வரும் படங்களுக்கு பொருத்தமான பெயரை எழுதுக.

10.



........................

11.


........................


12.


........................

13.


14. முதல் இரண்டு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



உரு 1


உரு 2

i.  ii.  iii. 

15.

உரு 1


உரு 2

i.  ii.  iii. 

16. ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் சில மாதங்களுக்கு 30 நாட்களும் 28 நாட்கள் கொண்ட மாதமும் உள்ளன. இதை ஒழுங்கு முறையில் எழுதினால் வருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. *31 நாட்கள் கொண்ட மாதங்கள் - 7*
*30 நாட்கள் கொண்ட மாதங்கள் - 4*
*28 நாட்கள் கொண்ட மாதம் - 1*

ii. *31 நாட்கள் கொண்ட மாதங்கள் - 6*
*30 நாட்கள் கொண்ட மாதங்கள் - 5*
*28 நாட்கள் கொண்ட மாதம் - 1*

iii. *31 நாட்கள் கொண்ட மாதங்கள் - 5*
*30 நாட்கள் கொண்ட மாதங்கள் - 6*
*28 நாட்கள் கொண்ட மாதம் - 1*

17. 162, 134, 157, 189 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது முதலாம் எண்ணின் நடுவில் இருக்கும் பெறுமானம் யாது?

i. 3 ii. 30
iii. 300 iv. 100

18. வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்?

| | | |
|---|---|---|
| 24 | 12 | 12 |
| 40 | .... | 20 |
| 36 | 11 | 25 |

i. 20 ii. 15
iii. 30 iv. 13

19. 500 g பருப்பின் விலை 25 ரூபாவும் 1000 g சீனியின் விலை ரூபா 120 உம் ஆகும். 1 kg பருப்பும் 1250 g சீனியும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

20. பின்வரும் எண் நிரையில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.


| | | | |
|---|---|---|---|
| 1 | 0.75 | 0.5 | ..... |

21. 6 m நீளமான கம்பித் துண்டில் 275 cm நீளமான ஒரு துண்டு வெட்டப்பட்டது. மிகுதித் துண்டின் நீளம் யாது?


22. ஒற்றை எண் ஒன்றையும் இரட்டை எண் ஒன்றையும் கூட்டினால் வரும் விடை?

i. இரட்டை எண் ii. ஒற்றை எண்
iii. இரட்டை எண் அல்லது ஒற்றை எண்

23. இவ்வுருவில் சிறிய முக்கோணங்கள் எத்தனை வெட்டி எடுக்கலாம்?



24. இவ்வுருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?



25. 4 தோடம் பழங்களின் நிறை 1600 g எனின் 6 தோடம் பழங்களின் நிறை

சரியான விடைக்குக் கோடிடுக.

26. உணவு வைக்க தேவையானது (கலம், களம்)

27. பூக்களில் இருந்து வருவது (மனம், மணம்)


28. கடலில் எழுவது (அளை, அலை)

29. வேகமாக ஓடுவது (பரி, பறி)

30. மிருகங்களுள் பெரியது (கறி, கரி)


பின்வரும் படத்தோடு சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கு கோடிடுக.

31. 
i. தச்சன்
ii. குயவன்
iii. கொல்லன்

32. 
i. பொற்கொல்லன்
ii. மேசன்
iii. செம்படவன்

33. 
i. நெசவாளி
ii. கொல்லன்
iii. பொற்கொல்லன்

34. 
i. நெசவாளி
ii. தச்சன்
iii. ஜோசியன்

35. 
i. வலவன்
ii. மீகாமன்
iii. சாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்க ளுக்கு விடை தருக.

அம்மா அம்மா வா இங்கே
அழகாய் மேலே பார் அங்கே
பந்தா பழமா தெரிய வில்லை
பொற்குடமோ என்றும் புரியவில்லை

36. இப்பாடல் எதைப் பற்றி குறிப்பிடுகிறது?
i. அம்மா ii. பந்து iii. சந்திரன்

37. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையுமான சொல்?
i. அம்மா ii. பார் iii. பழம்

38. பாடலில் இடம்பெற்ற ஒரு சோடி எதிர்சொல்
i. இங்கே, அங்கே ii. பந்து, பழம்
iii. தெரியவில்லை, புரியவில்லை

39. பொற்குடம் என்பதை பிரித்து எழுதினால்.
i. பொட்+குடம் ii. பொன்+குடம்
iii. பொற்+குடம்

40. வடிவாய் என்பதற்கான பாடலில் இடம்பெற்ற சொல்.
i. அழகாய் ii. தெரியவில்லை
iii. புரியவில்லை

41. பழுதடைந்த மரவள்ளிக் கிழங்கை சாப்பிடுவ தனால் ஏற்படக்கூடிய பாதிப்பு.
i. மயக்கம் ஏற்படல்
ii. வயிற்றுவலி ஏற்படல்
iii. வாந்திபேதி
iv. சமிபாட்டுக் கோளாறு

பின்வரும் எண் கோலத்தில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.


42. 3, 12, 36, ..........
43. 1, 9, 27, .........
44. 20, 40, ........, 160
45. 5, ........, 45, 135


பெட்டியினுள் தரப்பட்டுள்ள எண்களை மட் டும் பயன்படுத்தி விடை தருக.


| | | |
|---|---|---|
| 3632 | 3627 | 3623 |
| 3764 | 5946 | |

46. எண்களை ஏறுவரிசைப்படுத்தினால் வரும் கடைசி எண்?
47. நூறினிடத்தில் வரும் 7 எண்.
48. ஆயிரம் இடத்தில் வரும் 5 எண்ணை எழுதுக?


பின்வரும் உருக்களிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையை எழுதுக.

49. 

50. 

51. 

52. ஒரு வருடத்தில் எத்தனை வாரங்கள்?
53. நெட்டாண்டில் வரும் நாட்கள் எத்தனை?
54. விளையாட்டுக் கார் ஒன்றை ஒருவர் ரூபா 1000 தாள்காசு ஒன்றை கொடுத்து வாங்கிய போது கடைக்காரர் ரூபா 197 ஐ மிகுதியாகக் கொடு த்தான் எனின், விளையாட்டுக் காரின் விலை எவ்வளவு?
55. பத்தாயிரத்து எழுநூற்று ஒன்று என்பதை எண் குறியில் எழுதுக.
56. 8000+00+10+1 இந்த எண்களை சேர்த்து எழுதும் போது கிடைக்கும் விடை?
57. பெட்டியினுள் தரப்பட்டுள்ள பந்துகளில் 1/4 பங்கு எத்தனை?



**விடைகள்**

1. ii
2. ii
3. ரூபா. 1000
4. ரூபா. 36.50
5. ரூபா. 901.50
6. 4 l - 4000 ml
7. சனி
8. iii
9. 6/12
10. அம்மியும் குழவியும்
11. நெல் அறுக்கும் கத்தி
12. உரல் - உலக்கை
13. ஆட்டுக்கல்
14. iii
15. ii
16. i
17. ii
18. i
19. 201.50 ரூபா
20. 0 பூச்சியம்
21. 325 cm - 3 m 25 cm
22. ii
23. 8
24. 12
25. 2400 g
26. கலம்
27. மணம்
28. அலை
29. பரி
30. கரி

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தை 'ஆ' பகுதியில் தெரிந்து கட்டத்தில் எழுதுக.

| அ | | ஆ |
|---|---|---|
| 1. ஒன்றன்பால் | ....... | 1. பாடகன் |
| 2. மூதுரை | ....... | 2. திருவள்ளுவர் |
| 3. உயர்திணை | ....... | 3. ஔவையார் |
| 4. சினைப்பெயர் | ....... | 4. ஒட்டகம் |
| 5. திருக்குறள் | ....... | 5. கொம்பு |

பின்வரும் கடித உறையை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| | A |
|---|---|
| வ. வாணி | ப. விதுஷன் |
| இல. 7 | இல. 4 |
| ஒழுங்கை இல. 6 | செட்டியார் தெரு |
| பிரதான வீதி | யாழ்ப்பாணம் |
| வவுனியா | |

6. A என்ற இடத்தில் வர வேண்டியது?
7. இலங்கையில் சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி
8. இம்மடலை அனுப்பியவர் யார்?
9. இம்மடலை பெற்றவர் யார்?
10. வவுனியாவில் வசிப்பவர் யார்?
11. இதனை தபாலில் சேர்க்க எங்கே செல்ல வேண்டும்?
12. இல. 4 இல் வசிப்பவர் யார்?
13. விதுஷன் எந்த மாகாணத்தில் வசிக்கிறார்?

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.

14. கல்வி - நஸீர் - ஆர்வம் - கற்பதில் - மிக்கவன்
15. ஆட - குரங்குகள் - மயில்கள் - போட்டன - நடனம் - தாளம்

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

16. மட மத் தென்ன :................................
17. மகே நம நாமல் :................................
18. கிரவா கொல பாட்டய் :................................


பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

19. WE ARE PLAYING :................................
20. THIS IS A TREE :................................

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| 21. | கல் | .................. |
| 22. | மரம் | .................. |
| 23. | முள் | .................. |

பின்வரும் உருக்களுக்கான பெயர்களை தமிழில் எழுதுக.

24.  ..................

25.  ..................

சரியான வாக்கியத்திற்கு கோடிடுக.

26. i. நாம் நாகரீகமாக வாழ வேண்டும்.
ii. அநுஸ் காச்சலினால் அவதியுற்றான்.
iii. நான் பாடசாலைக்கு சமுகமளித்தேன்.

27. i. பாகற்காய் கைக்கும்.
ii. ராதா பைத்தங்காய் வாங்கினாள்.
iii. மரவெள்ளியின் விலை அதிகரித்தது.

28. i. நீள நிற பட்டம் வானில் பறந்தது.
ii. சாந்தியும் பாமாவும் கடைக்குச் சென்றாள்.
iii. புறாக்கூட்டம் பறந்து சென்றது.

29. இலங்கையின் முதலாவது புராதன தலைநகரம் எது?
i. கண்டி ii. சீகிரியா
iii. கொழும்பு iv. அனுராதபும்

30. மரச் செதுக்கல் வேலைகளுடைய கலைத்துவப் படைப்புகள் காணப்படும் இடம்.
i. கண்டி ii. கம்பளை
iii. கொழும்பு iv. மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அதிகளவு புராதனக் குளங்கள் காணப்படும் மாவட்டம்.

i. பொலன்னறுவை ii. சீகிரியா
iii. அனுராதபுரம் iv. குருணாகல்

32. தற்போது இலங்கை மக்கள் அடிக்கடி சந்திக்கும் இயற்கை அனர்த்தம் எது?

i. இடி மின்னல் ii. எரிமலை
iii. புவி நடுக்கம் iv. சுனாமி

33. வானில் எவ்வகையான முகில் கூட்டம் உள்ள போது மழை பெய்யும் என எதிர்வு கூறலாம்?

i. படைமுகில் ii. திரண்முகில்
iii. கீற்றுமுகில் iv. பனிமுகில்

34. இலங்கையில் அதிகளவு நீர்வீழ்ச்சிகள் காணப்படும் மாகாணம் எது?

i. மேல் மாகாணம்
ii. மத்திய மாகாணம்
iii. ஊவா மாகாணம்
iv. தென் மாகாணம்

35. வீட்டுத்தோட்ட பயிர்கள் எந்த மண்ணில் செழிப்பாக வளரும்?

i. மணல்மண் ii. இருவாட்டிமண்
iii. களிமண் iv. ஆற்றுமண்

36. வீட்டுத்தோட்டத்திற்கு வேலி அடைப்பதற்கு பொருத்தமான தடி எது?

i. கண்டல் ii. தேக்கு
iii. கிளிசிறிடியா iv. முருங்கை

37. சாடிகளில் பயிர்களை நடுவதால் ஏற்படும் நன்மை எது?

i. பராமரிப்பு இலகு
ii. குறைந்த இட வசதி
iii. அழகாக இருத்தல்
iv. மேற்கூறிய யாவும்

38. பின்வரும் பயிர்களில் எதனை கிழங்குகளை நாட்டி பெறலாம்?

i. மரவள்ளிக் கிழங்கு
ii. உருளைக் கிழங்கு
iii. வற்றாளைக் கிழங்கு
iv. பீற்றூட்

39. பின்வரும் பயிர்க் கன்றுகளை நாற்று மேடையில் இருந்து பெற்று, பாத்திகளில் நடலாம்?

i. கோவா ii. மரவள்ளி
iii. வெண்டி iv. கரும்பு

40. வடிகட்டி ஒன்றினூடாக நீரை வடிக்கும்போது நீரிலுள்ள அசுத்த வாயுவை உறிஞ்ச உதவுவது எது?

i. மணல்படை ii. தும்புப்படை
iii. சிறுகற்படை iv. கரித்துண்டுப் படை

41. சீனி எத்திரவத்தில் விரைவாகக் கரையும்?

i. குளிர் நீரில் ii. கொதித்தாறிய நீரில்
iii. வெந்நீரில் iv. தண்ணீரில்

**பின்வரும் கருத்துக்கு பொருத்தமான பழமொழியை தெரிந்து கோடிடுக.**

42. எதையும் ஆராயாமல் காரியத்தில் இறங்கலாகாது.

i. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
ii. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
iii. ஆழமறியாமல் காலை விடாதே

43. அளவுக்கு மிஞ்சி ஆசைப்படுவது கைசேதத்தை ஏற்படுத்தும்.

i. பேராசை பெருநட்டம்
ii. எட்டாக்கனிக்கு கொட்டாவி விடாதே
iii. இரக்கப் போனாலும் சிறக்கப் போ

44. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி இலக்கமிடுக.

1. வெற்றிவாகை சூடினான்
2. போட்டியில் வேகமாக ஓடினான்
3. ராகுல் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற கடும் பயிற்சி செய்தான்
4. அவனுக்கு வெற்றிக்கேடயம் கிடைத்தது

**சொற்களை ஒழுங்குபடுத்துக.**

45. தி-கு-ழ-த்-கி-க்-சை

46. ண்-டி-வெ-ம-ட்

**எதிர்பாற் கருத்தினை தருக.**

47. ................ குயத்தி

48. உழவன் ................

49. நடிகன் ................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைதிருத்தி எழுதுக.

50. புத்தீசல்

51. தென்னங்கீத்று

எனது அம்மா வாங்கித் தந்த புத்தாடை என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களேனும் கொண்டிருத்தல் அவசியம்.

**விடைகள்**

1. 4
2. 2
3. 1
4. 5
5. 2
6. முத்திரை
7. 5 ரூபா
8. வ. வாணி
9. ப. விதுஷன்
10. வ. வாணி
11. தபாற்கந்தோர்
12. ப. விதுஷன்
13. வட மாகாணம்
14. நஸீர் கல்வி கற்பதில் ஆர்வம் மிக்கவன்.
15. மயில்கள் நடனம் ஆட குரங்குகள் தாளம் போட்டன.
16. எனக்கு சோறு தாருங்கள்.
17. எனது பெயர் நாமல்.
18. கிளி பச்சை நிறம்.
19. நாங்கள் விளையாடுகிறோம்.
20. இது ஒரு மரம்.
21. கற்கள்
22. மரங்கள்
23. முட்கள்
24. ஒலிபெருக்கி
25. கணிப்பான்
26. iii
27. i
28. iii
29. iv
30. ii
31. iii
32. i
33. i
34. iii
35. ii
36. iii
37. iv
38. ii
39. i
40. iv
41. ii
42. iii
43. i
44. 3, 2, 1, 4
45. கிழக்குத் திசை
46. மண்வெட்டி
47. குயவன்
48. உழத்தி
49. நடிகை
50. புற்றீசல்
51. தென்னங்கீற்று

**41ஆம் பக்கத் தொடர்...**

31. குயவன்
32. செம்படவன்
33. பொற்கொல்லன்
34. நெசவாளி
35. மீக்காமன்
36. iii
37. ii
38. i
39. ii
40. அழகாய்
41. i
42. 108
43. 81
44. 80
45. 15
46. 5946
47. 3764
48. 5946
49. 8
50. 4
51. 1
52. 52
53. 366
54. ரூபா. 1823
55. 10701
56. 8011
57. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2014

## குளி/ மடிகே மிடியால மத்திய கல்லூரி - பண்டார கொஸ்வத்த


என்.எப். சம்ஹா
181


எம்.என்.எப். நுஹா
179


எம்.ஏ.எப். முஸ்னா
175


ஏ.எஸ்.எஸ். சாபிறா
171


ஆர்.எப். சௌமியா
170


எம்.எஸ்.எப். சம்ஹா
161


எம்.எஸ்.எப். சஹீஹா
161


கே.எப். இஸ்னியா
160


எம்.வை.எப். இல்மா
158


எம்.ஈ.எப். ராஷிதா
157

## நிக/ அபுக்காகம முஸ்லிம் மகா வித்தியாலயம்
## மொன்னகுளம்


எஸ்.எப். சஹானா
166


எம்.ஏ. ஆஷிகா
164


ஏ.ஏ. பஸால் முஹம்மட்
159


ஏ.ஜி.எப். றிஸ்மா
158


ஏ.பி. அப்ரிஹா
155


எம்.எம். ஆஇஷா
153


எம்.பி.எப். சபீஹா
152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 1-5 வரையிலான மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட எமது வெளியீடுகள்




புதிய நூல்களின் விபரம் உங்களது கைத்தொலைபேசிக்கு உடனுக்குடன் வந்தடைய f<space>ibhbooks என type செய்து 40404 க்கு அனுப்புங்கள்.

IBH Publication
Like

## எமது நிறுவனத்தின் வெளியீடுகள்....

- மாணவர்களின் அடைவு மட்டத்தை அளக்கக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர்களும் பெற்றோர்களும் இலகுவாக பிள்ளைகளுக்கு வழிகாட்டக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டல் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.
- ஆசிரியர் அறிவுரைப்பில் தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடைந்து கொள்ள ஏதுவான விதத்தில் பாடநூல் அலகுகள் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.
- மாணவர்கள் சுயமாகவே கற்கும் விதத்தில் புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**ஏ.எஸ். ஜெளபர்:**

1. சுற்றாடல் (தரம் 1-5 வரை)
2. பரீட்சை வழிகாட்டி (தரம் 1-4 வரை)
3. தமிழ் (தரம் - 3-5 வரை)
4. கணிதம் (தரம் - 3-5 வரை)
5. அறிவுச்சாகரம்
6. மொழி ஆரம்
7. நந்தவனம் (மாதிரி வினாத்தாள் ) தரம் 4-5 வரை

**முஹிடீன் ரஜா:**

1. தமிழ் (1 - உயர்தரம் வரை)
2. 4-8 வயது மாணவர்களுக்கான கதைத் தொகுதி
   * வாத்துவாணி
   * யார் பெரியவர்
   * ஸ்நோ வைற்றும் ஏழு சித்திரக் குள்ளர்களும்
   * விலங்குகள் சொல்லும் விந்தைக் கதை
   * கூலகப்பயால் கொத்தப்பட்ட சிறுவன்

**பீ. யோகேஸ்வரன்:**

* My English Teacher (Grade 3-4)

**எம்.எம்.எம். அஸாம்:**

* இஸ்லாம் - தரம் - 1-8 வரை

**பீ. உமாசங்கர்:**

* சிறுவர்களுக்கான பொது அறிவு

**எம்.என்.எம். இம்ரான்:**

1. பாலர் கணித வழிகாட்டி (தரம் 1-2)
2. முன்பள்ளி இலகு பாலர் தமிழ் வழிகாட்டி (தரம் -1)

**கே. எம்.எம். லாபிர்:**

* English Class Work Book (Grade 1-5)

**டீ. நிஸாம் முஹம்மட்:**

* மொழிப் பேழை (தரம் 3-5)

**மனோ- சுரேஷ்:**

1. புலமைப் பூக்கள் (தரம் - 5)
2. புலமைச் சிட்டுக்கள் (தரம் - 5)
3. புலமை முரசு (தரம் - 3)
4. புலமை விருந்து (தரம் - 4)

**பீ. அம்பிகைபாகன்:**

* இலகுவழிப் புலமைப் பரீட்சை வழிகாட்டி (தரம் -5)

**செ. திலக்:**

* கணிதம் செயல்நூல் (தரம் - 5)

**எம். கே. நஜிபுல்லா:**

* கணிதம் (தரம் 1-5)

**ஏ.ஜே.ஜே. ஜவான்:**

* இரண்டாம் மொழி சிங்களம் (தரம் 1-5)

**ஏ. ஜே.ஏ. ஹகம்:**

* இரண்டாம் மொழி சிங்களம் (தரம் 3-4)


**இஸ்லாமிக் புக் ஹவுஸ்**
77, தெமடகொட வீதி, கொழும்பு 09
தொலைபேசி: 011 2684851, 011 2669197
பெக்ஸ்: 011 2688102
இணையம்: WWW.ibh.lk

Like
IBH Publication

**IBH PUBLICATION**
Road, Colombo - 09 Tel: 0115 736098, 077 2518641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org